[illegible] [illegible]

V3 NO.38 25 Sep1930

C


[illegible]2Y, N28KN
N36.3.38
189122

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 3] 1930 ௵ செப்டம்பர் ௴ 25உ [No. 38

## பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 741
2. குறுந்தொகை (பாட்டு 183—196)
K. இராமரத்நம் ஐயர் B.A. 743
3. அப்பர் (இரத்தினப் பரிக்ஷை)
E. N. தணிகாசலமுதலியார் B.A. B.L. 746
4. மாதவி மாதவம்.
பொ. இராமாநுஜன் 748
5. தமிழ்ப்பாடம் (நைடதம்—நளன் தூதுப் படலம்) 750
6. கம்ப ராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 752
7. மழை—க. சோமசுந்தரம் பிள்ளை 756
8. வர்த்தமானம் 759
9. மதிப்புரை 759

## கலாநிலயம்

### பேயச்சில் பிள்ளையாரோ.

வோட்டெடுக்கும் நாட்டத்தில் ஒழுக்கமில் இழுக்குக்கள் இத்தனைதான் உளவென்று சொல்லிக் கரைகாண்பது அரிதினும் அரிதாதலால் அவசியமான சில அம்சங்களையே முதல்வைத்து இதுகாறும் செப்பிவந்தோம். இனி அவரவர் அறிவு, அநுபவம், ஆராய்ச்சி முதலிய சாதனங்களைக்கொண்டு தம்முன் நிகழ்கின்றவைகளின் தன்மைகளைத் தெளிவுற நன்கு தேர்ந்து நாம் உரைத்தவைகளின் அமைதியைமாத்திரமன்றி, உரையாது விட்டவைகளையும் சேர்த்துக் கொண்டு உறுபொருள் உணர்வாராயின் உலகம் உண்மைநெறியில் ஓரளவு உயர்வடையுமென்று யாதும் ஐயமின்றி நம்புகின்றோம். யாம் இத் தலையங்கங்களில் பற்பல இடங்களில் உரைத்துள ஒன்றினை மீண்டுமிங்கு நினைவுபடுத்தல் மிகையாகாது. உலகின் பொதுவெல்லாம் ஒருபோக்காக யாம் அதற்கு எதிருற உரைக்கின்றோம் என வியப்படைதோடுநில்லாமல், எம்முடைய முடிவுகள் தர்க்கமுறைக்கும் அநுபவ அறிவிற்கும் இணங்கியிருக்கவில்லையென்று இயம்ப இயலாதவரையில் அம்முடிவுகளே உண்மையானவையென்று துணிதலும்வேண்டும். இவைகளை ஓடும் ஓட்டத்தில் ஓதுவார் எவரும் உணர்தல் இயலாது. அவைகளில் தோய்ந்து ஆழ்ந்து உணரவேண்டுமென்னும் விருப்பமுடன், அகன்ற கல்வியும் அநுபவமும் அமைந்துள்ளவர், இம்முடிவுகளை தக்க முறையில் சோதித்து அவை கொள்ளத்தக்கனவெனக் கண்டாராயின் இக் கருத்துக்கள் அகன்று பரவவேண்டுமென்று பெரிதும் விழைவார்களென்பதிற் சிறிதும் ஐயமில்லை. மற்று, அம்முடிவுகள்தாம் பிழைத்துளவென்று நினைப்பாராயின் அப்பிழைதான் எவ்வயின் எதனால் நேர்ந்ததென்று காட்டவல்லவராயும் இருத்தல் வேண்டும். கார்லைல், எமர்ஸன், ஆர்னால்ட், ரஸ்கின், மாண்டஸ்கியூ, டாக்வில், பிளேடோ, அரிஸ்டாட்டல் அனைய பேரறிஞர், இந்தச் சட்டசபைத் தேர்தல் முதலியவிடயங்களின் தன்மையை ஒரு தொடர்ச்சியாய் எம்மைப்போல் வரைந்திலராயினும் அன்னார் கட்டுரையிற் காணப்படும் பற்பல வாசகங்கள் இங்கு விளக்கப்பெறுகின்ற கருத்துக்களுக்கு ஆதாரமாவதால் எம்முடைய முடிவுகள் பிழையாமல் உண்மையைத் தழுவியே நிகழுமென்னும் உறுதி எழுகின்றது.

அரசியலை நடத்துகின்ற சபைகளைப்போலவே, பாடசாலைகளும் நமது நற்கதிக்குக் காரணமாயமைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன. எனினும், இக்காலம்அவைகளைநிகழ்த்துகின்ற நோக்கங்களையும் முறைகளையும் நோக்குங்கால் பேய்களையே, மனிதர் பிள்ளையார்களெனப் பிடித்துக்கொண்டுவருகின்றார்களென்பது நன்குபுலப்படும். மனிதரது பரிபவத்திற்கு இதனினும் இறங்கியதோர் இலச்சினை இடுதலரிது. மானுடப் பெருமைக்கெல்லாம் கொலைக்களம் இக்காலப் பாடசாலைகள். இழிதகை நோக்கங்கள் விளைவதற்குரிய செழிப்புவாய்ந்த நிலம் வேறிலது. வன்சொற்கள் இதனினும் அதிகமாய் வழங்குதற்கு யாம் வெள்குகின்றதால் இதனுடன் நிறுத்திக்கொள்கின்றோம். எனினும், இத்தகைய சொற்களுக்கு இப்

பாடசாலைகள் இலக்காவது எங்ஙனமென்பதைச் சிறிதிங்குத் தொகுத்துநோக்குதல் வேண்டும்.

தீதென்று தாமும் உணர்ந்து பிறரும் பழிப்பனவற்றைப் பயில்வார்க்கு உய்திறம் ஒருநாள் உண்டாகலாம்; மற்றுத் தீதென்று தெரியாமல் நல்லதே என்று நினைத்துத் தீமையில் உழல்வார் மாய்ந்தொழியும் வரையில் அதனைக் கைவிடார். முன்னோரிடத்தில் யாம் விளக்கியுள இவ்வுண்மையைச் சிறிதிங்கு நினைவிற் கொள்ளுதல்வேண்டும். அதனாற்றான், கள்ளுக்கடையையும் வேசையர்வீதியையும் அடைக்கமுயலுமுன் இப்பாடசாலைகளை இடித்துத்தகர்க்கும் வழியைத் தேடவேண்டுமென. யாம் இவ்வளவு வற்புறுத்துகின்றோம். ஏனெனில், 'எலிமெண்டரி' பள்ளிக்கூடம்முதல் சர்வகலாசாலைவரையில் யாவும் விழுந்தொழியுமாயின் அவைகளோடு, மானஞ்சிதைக்கும் அரசியல்சபைகளும், துரோகம்மிகுந்தவழக்குமன்றங்களும், பாவம்மலிந்த வியாபாரநிலையங்களும், யாவும் விழுந்து தரைமட்டமாவது திண்ணம். ஆயபின், உழுதுண் டினிதுவாழ்கின்ற பழுதில்லா வாழ்க்கைக்கு வேண்டியகழனிநிலங்களும் தொழுதுகரையேறக் கடவுளர் கோயில்களுமே உலகிற்கு உற்றபொருள்களாய் எஞ்சிநிற்கும். வேறென் வேண்டும்! இம்மை மறுமை என்றபாகுபாடின்றி இரண்டிற்கு மொருங்கே உறுதி பயக்கும் இவையிரண்டையும் கைகடக்க விட்டுவிட்டுப் பின் அழுதிரங்கி அரற்றினராய் மார்புடைத்து மாந்தர் இன்றைக்குத் திரிவதுபோல் இனித் திரியமாட்டார். இன்னதோர் நன்னிலையை நினைக்கும் பொழுதே நல்லதோர் மனத்தில் இன்சுவை ஊறும். இதுவே அதன் உண்மையாய மேன்மையைப் பிழையாமல் அறிதற்குரியதோர் குறியெனக் கொள்ளலாம். சட்டசபைகளுக்கும், வழக்குமன்றங்களுக்கும், வியாபாரமிகுதிக்கும், உத்தியோக மேம்பாட்டிற்கும் ஆசைகொண்டு அவாவலாமே யல்லாது, அவைகளை நினைக்கும்போது மெய்யுணர்வுடையவர் மனங்களெல்லாம் கைத்து நையவே காண்கின்றோம். வேம்பைத் தின்று வாய்ச்சுவை பார்ப்பதெல்லாம் வீண். உத்தியோகம் எதுவேயாயினும் அதனைக் கோணியமுகத்தோடல்லால் நடத்தியவர் எங்குளர்! இன்பமுடைய மனத்தினராய் எந்தத் தொழிலை யார் நடத்தியிருக்கின்றனர்? "இனியது போலும் இவ்வரசை எண்ணுமோ" எனத் தயரதனே விளம்பி, அதனை 'நெடிதுநாளுண்ட எச்சிலாய்'க் கருதினனென்றபின் வேறென் பகரவேண்டும். இதற்கெதிர், வயல்களில் விளைந்த பொருள்களை வறியவர்க்குதவி மிக்க விருந்துணமனையின் உய்த்து, அங்கு,

முந்துமுக் கனியி னொடு
முதிரையின் முழுத்த நெய்யிற்
செந்தயிர் கண்டங் கண்டம்
இடையிடை செறிந்த சோற்றில்

அமுதருண்டி தாமும் விருந்தொடுந் தமரினோடும் அருந்தியும், அங்கமனைத்துங்கொண்டு அருட்பெருங் கடவுளை வணங்கி வாழ்த்தியும் வாழ்கின்ற வாழ்வினிலூறும் இன்பச்சுவையின் அமைதியைச் சீர்தூக்கிப் பார்க்கலாகாதோ. இவ்வாறு சீர்தூக்கிப் பார்ப்பதற்குரிய அறிவு இல்லாதார் அவ்வறிவைப் பெறுவதற்கே முதலில் செய்தவங்கள் பல செய்ய முயலவேண்டும். இத்தகைய மெய்வாழ்க்கை இன்பத்தினின்று விலக்குவதுமல்லாமல், அதனிற் சுவையும் பயனும் பெரிதுளவென்று உணர்வதற்குரிய அறிவினின்றும் மாந்தரை அயலாக்கும் கொடும் பழியிற் பெரும் பகுதியை இக்காலப் பாடசாலைகளே பகிர்ந்துகொள்கின்றன.

விழுப்பமுடைய வார்த்தைகள் வாய்தந்தன வேறு வேறு உரைக்கலாமாயினும், வயிறு வளர்த்தலே இக்காலப் பாடசாலைகளின் நோக்கமென்பதை மறுப்பவர் மெய்யை உணராதாரே; அல்லது உணர்ந்தும் உரையாதவராவர். அந்தக்கரண புறக்கரணங்களெல்லாம் அப் பாவி வயிற்றையேவெளிப்படையாகவும் மறைபொருளாகவும் பாராட்டி நிற்கின்றன. பசிப்பிணியை நினைத்து மாத்திரம் நாமிது பகரவில்லை. அல்ப ஆசை, அல்ப நோக்கம், இவை நிறைவேறுவதற்குரிய அல்பக்கருவிகள் ஆயவைகளைப் பெறுவதற்கே இப்பாடசாலைகள் நிகழ்கின்றன. இப்பாடசாலைகளில் படித்துத் தேர்ந்து பட்டங்கள் பெற்றவர்களுக்கும், அஃதொன்று மில்லாமலிருப்பவர்களுக்கும் அடிப்படையான வேற்றுமை இல்லையெனலொண்ணாது. இப்பாடசாலைகளில் கல்லாதபேர்களே நல்லவர்கள்;நல்லவர்கள்! கள்வர் பொய்யர் கொலைஞர் குடியர் பிறர்மனை விழையும் பாவியர் இருதிறத்தோரிடையும் இயங்குகின்றனர். இலஞ்சம் கொடுப்பதும் வாங்குவதும் எவரிடத்தும் குறைவில்லை. கண்ணோட்டமென்னும் அத்தெய்வத்தன்மை, பாடசாலையிற் படிக்காதவரிடத்தேயே அதிகமாக இருக்கின்றது. பழிக்குச் சிறிதேனும் அஞ்சுபவர் இக்காலப் பாடசாலைகளில் படிக்காதவர்கள். தெய்வபக்தி என்பது படித்தவர்திறத்தில் நசித்துப்போனஅளவு படிக்காதவர்களிடத்தில் இன்னுங்கூட நசிக்கவில்லை. ஒழுக்கம் அடக்கம் முதலியவைகளும் அப்படியே. திண்ணைப்பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் பிள்ளைகளை இரக்கமின்றி அடித்து வருத்துவார்கள் எனக் கேள்விப்பட்டிருக்கின்றோம். எனினும், பிள்ளைகளேனும் அவர் சார்பில் மற்றவரேனும் உபாத்தியாயர்களை எதிர்த்தடித்தார்களென்று நாம் கேள்விப்பட்டதில்லை. இது இக்கால உயர்தரப் பாடசாலை மாணவர்களுக்கே உரியதோர் மேன்மையாகின்ற தன்மையை நடைமுறையிற்காண்கின்றோமே! ஐய, நாம் "முன்னேற்றம்" அடைந்துகொண்டுவருகின்ற செவ்வியிது கண்டீர்.

கலாசாலை என்றபேரோ பெரிது; ஆனால் அங்கு நிகழ்கின்ற தவ்வளவும் வர்த்தகமே. பாடசாலைப் புத்தகங்களைப் பிரசுரம்செய்து விற்பவர்களுடன் தலைமை உபாத்தியாயர்கள்ஏற்பாடுகள்செய்துகொண்டு பிள்ளைகளின் தலையில் பாழான புத்தகங்களைச் சுமத்துகின்ற அச்செய்கையை நினைத்தே நாம் பாடசாலைகளை வர்த்தகக்கடைகள் என இங்குக் குறித்துளோம் என்று எண்ணவேண்டா. ஒப்பிற்கு எதிர்மூச்சுப் போட்டுவிட்டுப் போவதல்லால்,கூலிக்குக் குற்றேவல் செய்யும் அவ்விடங்களில் வேறு யாது நிகழக்கூடும். கல்வி அறிவு ஒழுக்கம் தெய்வபக்தி மனவமைதி முதலிய நலங்களால் திகழ்கின்ற உபாத்தியாயர்கள், நூற்றிற்கு—ஆயிரத்திற்கு—எத்தனை பேர். படிக்கும் மாணவர்களிலும், அம்மாணவர்களைப் பாடசாலைகளுக் கனுப்பும் அவர் பெற்றோர்களிலும், கல்வி அறிவு ஒழுக்கம் தெய்வபக்தி முதலியவைகளைப் பெற்றுத் தூயவாழ்க்கையே இப்பாடசாலைகளால் எய்தவேண்டும் எனும் நோக்கமுடையவர், ஆயிரத்திற்கு—பதினாயிரத்திற்கு—எத்தனை பேர்! பேயச்சு வைத்துப் பிள்ளையார் பிடிக்க முடியுமோ!



# குறுந்தொகை

[734-வது பக்கத் தொடர்ச்சி]

ஔவையார்] 183 [முல்லை

*கார்காலம் வந்தும் தலைவன் வாராமையால் ஆற்றுது வேறுபட்ட கிழத்தி தன் தோழிக்குச் சொல்லியது.*

சென்ற நாட்ட கொன்றையம் பசுவீ
நம்போற் பசக்குங் காலைத் தம்போல்
சிறுதலைப் பிணையிற் றீர்ந்த நெறிகோட்
டிரலை மானையுங் காண்பர்கொல் நமரே,
புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை
மென்மயி லெருத்திற் றோன்றும்
கான வைப்பிற் புன்புலத் தானே.

(உரை). நமதுதலைவர், தாம் சென்ற நாட்டிலுள்ளனவாகிய கொன்றையின் புதுப்பூக்கள் நம்மைப்போல பசந்திடுங் கார்காலத்தில் பொலிவற்ற காயாவின் பூ நிறைந்த பெரிய கிளை மென்மையான மயிலின் புறக்கழுத்தைப்போலத் தோன்றுங் காட்டிடத்துக் கொல்லைகளில், தம்மைப்போலச் சிறிய தலையையுடைய பெண்மானை விட்டகன்ற நெறிப்புற்ற கொம்பையுடைய ஆண்மானையுங் காண்பர்கொல்லோ?

பசத்தல் - பொன்னிறமாதல். கொன்றை பூக்குங்காலம் கார்காலம். இரலைமான் - பண்புத்தொகை. இரலை - ஆண்மான்; மான், இருபாற்பொது. எருத்து - கழுத்தின் மேற்புறம். கானவைப்பு - முல்லைநிலம். புன் புலம் - அவரை, துவரை முதலிய புன்பயிர்களை விளைவித்திடும் நிலம். புனத்தான் - புனத்தில், (உருபுமயக்கம்.) 'ஊரானோருதேவகுலம்' என்ற விடத்துப்போல 'ஆன்' என்பது 'தொறு' என்னும் பொருளில் வந்ததாகக்கொண்டு, 'புனந்தொறும்' என்றுரைப்பினுமாம்.

---

ஆரியவரசன் யாழ்ப் பிரமதத்தனார்] 184 [குறிஞ்சி

*ஒரு பேதையைக்கண்டு அறிவழிதல் தகாதெனக் கழறிய பாங்கனுக்குத் தலைமகன் தான் கண்டு காதலுற்றமகள் இத்தகையளென எடுத்துரைத்தது.*

அறிகரி பொய்த்த லான்றோர்க் கில்லை;
குறுக லோம்புமின் சிறுகுடிச் செலவே;
இதற்கிது மாண்ட தென்னா தசுப்பட்
டாண்டொழிந் தன்றே நாண்டகை நெஞ்சம்,
மயிற்க ணன்ன மாமுடிப் பாவை
நுண்வலைப் பரதவர் மடமகள்
கண்வலைப் படூஉங் கான லானே.

(உரை). தாம் நேரே கண்டறிந்த விஷயத்தைப்பற்றிப் பொய் சொல்லுதல் தக்கோரிடத்தில்லை. (ஆதலால் நான் சொல்லுமிதைக் கேள்.) நுண்ணிதாகிய (மீன் பிடிக்கும்) வலையினராகிய செம்படவர் குலத்து இளம்பெண்ணாகிய மயிலின் தோகையிலுள்ள கண்ணைப்போன்ற கரிய மயிர் முடியை உடைய பாவையன்னாள் தனது கண்ணாகிய வலையில் கண்டாரைச் சிக்கச் செய்யும் கானலிடத்து, இதற்கு இது மாண்புடையதென்று கருதாது எனது நாணத்திற் சிறந்த நெஞ்சம் வழிக்கொண்டு சென்று அங்கேயே தங்கியொழிந்தது. ஆதலின் அவள் வாழும் அச்சிறுகுடிலுக்குச் சென்று சார்தலை நீ விட்டொழிவாயாக.

குறுகல் ஒம்புமின் - குறுகுதலை, அணுகுதலை விட்டிடு, give up approaching. ஒம்புமின் - மரியாதைப்பன்மை. செலவே குறுகல் ஒம்புமின் - செலவையும் குறுகலையும் ஒம்புமின். அதர் - வழி. ஆண்டு, என்பது ஈற்றடியிலுள்ள 'கானல்' என்பதைச் சுட்டி நின்றது; கீழேயுள்ள சிறுகுடியைச் சுட்டியதாகவுங் கொள்ளலாம். நாண் தகை-நாணாகிய நற்குணம். 'மயிற்கணன்ன முடி' என்றது பல நிறப்பூக்களால் அலங்கரிக்கப்பட்ட மயிர் முடியை. படூஉம்-(பிறவினை) படுக்கச் செய்யும்.

மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார் } 185 { குறிஞ்சி

*களவொழுக்கக் காலத்துத் தமது இரவுக்கூட்டத்துக்கு ஏற்பட்ட பல இடையீடுகளால் வருந்தி வேறுபட்ட தலைமகள் ஆற்றியிருத்தல் வேண்டுமென்று தன்னை வற்புறுத்திய தோழிக்கு உரைத்தது.*

நுதல்பசப் பிவர்ந்து திதலை வாடி
நெடுமென் பணைத்தோள் சாஅய்த் தொடிநெகிழ்ந்
தின்ன ளாகுதல் நும்மிற் றாகுமெனச்
சொல்லி னெவனும், தோழி? பல்வரிப்
பாம்புபை அவிந்தது போலக் கூம்பிக்
கொண்டலிற் றொலைந்த வொண்செங் காந்தள்
கன்மிசை கவியு நாடற்
கென்னமர் மேனி யழிபடர் நிலையே.

(உரை). மேகத்தினிடியால் அழிந்த பல வரிகளையுடைய பாம்பின் படம் அடங்கியதைப்போல மழையால் அலைக்கப்பட்டுக் குவிந்த ஒளி பொருந்திய காந்தள்மலர் கல்லின்மேற் கவிழ்ந்து கிடக்குங் குறிஞ்சி நாடனுக்கு, 'நெற்றியிற் பசப்பூர,தேமல்கள் கெட்டு,நீண்ட மெல்லிய மூங்கிலைப் போன்ற தோள்கள் மெலிந்து வளையல் நழுவும்படி இத்தன்மையளாயினள் உனது காதலி' என்றும், எனது விரும்பத்தக்க மேனியின் அழகு அழிவதற்குக்காரணமான எனது துயரநிலையை (அவருழைச்சென்று) 'இது உம்மால் ஆயிற்று' என்றும் சொன்னால், தோழீ, உனக்கென்ன குறைவு உண்டாகும்?

திதலை - அழகுத்தேமல். பை-படம். அவிந்தது - விரிந்த படம் அடங்கியது. கொண்டல் - மேகம், மழை. மழைக் காலத்தில் மேகத்தினிடியால் பாம்புகள் பையவிந்தழிதலும், காந்தள் கூம்பிக் கவிழ்தலும் இயல்பாதலின் "கொண்டல் தொலைந்த' என்பதை மத்திம தீபமாக முன்னும் பின்னும் கூட்டுக. 'அமர்மேனி', வினைத்தொகை; அமர் - அமரும், விரும்பும், விரும்பப்படும். படர் - துன்பம், துயரம்.

---

ஒக்கூர் மாசாத்தியார்] 186 [முல்லை

*கார்காலம் வந்தும் தலைவன் வாராமையால் ஆற்றாளாகிய கிழத்தி தோழிக்கு சொல்லியது.*

ஆர்கலி யேற்றொடு கார்தலை மணந்த
கொல்லைப் புனத்த முல்லை மென்கொடி
எயிறென முகைக்கு நாடற்குத்
துயிறுறந் தனவால், தோழி, எங் கண்ணே.

(உரை). தோழீ, பெருஞ்சத்தத்தோடு கூடிய இடியுடன் கார்காலம் கலந்த கொல்லைப் புனத்துள்ள மெல்லிய முல்லைக்கொடி பற்களைப்போல அரும்பும் முல்லை நிலத்தலைவன் பொருட்டு எனது கண்கள் துயிலுதலைத் துறந்தன.

ஏறு - இடி. தலைமணந்த - மணந்த; 'தலை' என்பது ஒருபஸர்க்கம்.

---

கபிலர்] 187 [குறிஞ்சி

*தலைமகன் வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகளை ஆற்றுவித்தற் பொருட்டுத் தோழி அவனை இயற்பழித்தபோது தலைமகள் இயற்பட மொழிந்தது.*

செவ்வரைச் செச்சை வருடை மான்மறி
சுரைபொழி தீம்பால் ஆர மாந்திப்
பெருவரை நீழ லுகளு நாடன்

கல்லினும் வலியன், தோழி;
வலிய னென்னுது மெலியுமென் னெஞ்சே.

(உரை). தோழீ, வரையாட்டின் குட்டி(தாயின்) முலை பொழியும் இனியபாலை வயிறுநிரம்பக் குடித்து பெரியமலையகத்துள்ள செவந்த அடிப்பக்கத்தையுடைய வெட்சிமரத்தின் நிழலில் துள்ளி விளையாடும் குறிஞ்சி நிலத்தலைவர், (நீ சொல்லுகிறபடி) கல்லைக்காட்டிலும் வன்மையான நெஞ்சினரே; ஆயினும், அவர் வலியரெனக் கருதாது எனது நெஞ்சம் அவர் மாட்டு (நேயம் நீங்காது) தளர்கின்றது.

செவ்வரை - செவந்த அரை. செச்சை - வெட்சிமரம். 'பெருவரைச் செவ்வரைச் செச்சை நீழல்' எனக்கூட்டுக. வருடைமான் - பெண்வரையாடு. மறி - கன்று. சுரை - மடி, முலை; the udder.

---

மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் } 188 { முல்லை

குறித்த கார்ப்பருவம் வந்தும் தலைவன் வாராமையால் வருந்தியழிந்த கிழத்தி தோழிக்கு உரைத்தது.

முகைமுற் றினவே முல்லை ; முல்லையொடு
தகைமுற் றினவே தண்கார் வியன்புனம்;
வாலிழை நெகிழ்த்தோர் வாரார்;
மாலைவந் தன்றென் மாணலங் குறித்தே.

(உரை). குளிர்ந்த கார்காலத்தில், முல்லைக் கொடிகளில் அரும்புகள் முதிர்ந்தன; முல்லைக் கொடியுடன் அகன்ற முல்லை நிலத்துக் கொல்லைகள் அழகு மிக்கன; (தமது பிரிவால்) எனது வெண்மையான வளையல்களை நழுவச் செய்தவர் (இன்னும்) வந்திலர்; எனது சிறந்த உறுப்பு நலன்களையெல்லாம் சிதைக்கக் கருதி மாலைப்பொழுதும் வந்தது. (இனி நான் ஆற்றியிருப்பது எவ்வாறு?).

வால் - வெண்மை. இழை - அணி, இங்குக் கைவளை. வாலிழை - தூய்மையான ஆபரணங்கள் என்றுமாம்; இப்பொருட்கு 'உடல் மெலிவால் ஆபரணங்கள் பலவும் தத்தம் நிலையினின்று நெகிழச் செய்தவர்' என்று கொள்க. 'இழை நெகிழச் சாஅய் செல்லல்' (அகம், 251) என்றார் பிறரும். வந்தன்று-வந்தது. வியன்புனம் தகை முற்றினவே - 'கார் மழை தழீஇக் காடுகவின் கொண்டன்று' (ஐங்குறு - 184) என்றார் பிறரும்.

---

மதுரை ஈழத்துப்பூதன்தேவனார்] 189 [பாலை

வினைவயிற் பிரியலுற்ற தலைமகன் தேர்ப்பாகனுக்கு 'இன்றே சென்று வினைமுடித்து நாளை மாலைப்பொழுதில் மீளுமாறு தேரை விரையக் கடவுக' என்று சொல்லியது.

இன்றே சென்று வருவது நாளை;
குன்றிழி யருவியின் வெண்டேர் முடுக,
இளம்பிறை யன்ன விளங்குசுடர் நேமி
விசும்புவீசு கொள்ளியிற் பைம்பயிர் துமியக்
காலியற் செலவின் மாலை யெய்திச்
சின்னிரை வால்வளைக் குறுமகள்
பன்மா ணாகம் மணந்துவக் குவ்மே.

(உரை). இன்றே சென்று நாளை மீளுதும். குன்றினின்று கீழே பாயும் அருவியைப்போல வெண்மையான தேர் விரைந்து செல்ல, இளம்பிறையைப்போல விளங்கும் ஒளிபொருந்திய உருளைகள் ஆகாயத்திலே சுழற்றப்பட்ட கொள்ளிக்கட்டையைப்போல ஆரக்கால்கள் வேறாகத் தோன்றுதவாறு ஒரே வட்டமாகத் தோன்றும்படி கடுகச் சுழன்று,வழியிலுள்ள பசிய பயிர்கள் அறைப்புண்டு மடியும்படி காற்றின் தன்மையைக் கொண்ட செலவினால் மாலைப்பொழுதின் வந்தெய்தி, வரிசையாக வெள்ளிய சிலவாகிய வளையல்களை அணிந்த சிறுமகளின் பல ஆபரணங்களால் அழகு மேம்பட்ட மார்பினைத் தழுவி மகிழ்வேன்.

வருவது - மீள்வது. 'இளம்பிறையன்ன' - வடிவையன்றி நிறம்பற்றி வந்த உவமம். 'கொள்ளியிற் செலவின்,' 'பைம்பயிர் துமியச்செலவின்' என வியைக்க. ஆகம்-உடல், மார்பு.

இனி இதை, வினைவயிற் பிரிந்து வேற்று நாட்டிருந்த தலைமகன் வினை முடிவதற்குச் சிறிது தவக்கம் ஏற்பட்டு ஒன்றிரண்டு நாள் ஓய்வு கிடைத்தபோது அவ் விடைவெளியில் தனதூருக்குச் சென்று தலைமகளைக் கண்டுடனே மீளக் கருதித் தனது தேர்ப்பாகனுக்குத் தேரைக்கடுகக் கடாவுமாறு சொன்னதாகவும், விரைந்து சென்று மீள விரும்பிய தன் கருத்தைத் தனதுயிர்ப்பாங்கனுக்கு உரைத்ததாகவும் கொள்ளலாம்.

---

பூதன்புல்லனார்] 190 [முல்லை

தலைவனது பிரிவிடை ஆற்றாளாகிய கிழத்தி தோழிக்குச் சொல்லியது.

நெறியிருங் கதுப்பொடு பெருந்தோ ணீவிச்
செறிவளை நெகிழச் செய்பொருட் டகன்றோர்
அறிவர்கொல், வாழி தோழி, பொறிவரி
வெஞ்சின அரவின் பைந்தலை துமிய
வரவுரு முரறும் அரையிரு ணடுநாள்
நல்லே றியங்குதொ றியங்கும்
பல்லான் றொழுவத் தொருமணிக் குரலே.

(உரை). தோழீ, எனது நெறித்த கரிய கூந்தலோடு பெரிய தோள்களையுந் தடவித் (தண்ணளி புரிந்து), பின்பு எனது கையிற்செறிந்த வளைகள் நெகிழ்ந்து விழும்படி செய்து, ஈட்டும் பொருள் காரணமாக (என்னைத் தனியே விட்டு) அகன்ற தலைவர், பொறித்தாற் போன்ற வரிகளையுடைய கடுஞ்சினமுற்ற பாம்பின் படம்விரிந்த தலை துணியும்படி வரும் இடியிடிக்கும் நடுராத்திரியில் பல பசுக்கள் கட்டிய கொட்டிலில் நல்ல எருது (பீடுடன்)நடக்கும்போது உடனசைந்தாடும் கழுத்திற்கட்டிய ஒருமணியின் ஓசையைக் கேட்டுக் கேள்வரைப் பிரிந்த தனிமகளிர் படும் வருத்தத்தை அறியார் போலும்.

நீவி - தடவி. பைந்தலை - (மெலித்தல் விகாரம்) பைத்தலை; பையை, படத்தை உடைய தலை. துமியவர - துமியல் வர, துமியும்படி. 'வரவு உரும்' - எனப் பிரித்து, வரவினையுடைய இடி' என்றலுமாம். 'அரையிருள் நடுநாள்,' இருபெயரொட்டு. அரையிருள் - நடுராத்திரி, நடுநாள் இரவின் இடையாமம். குரல் - (ஆகுபெயர்) குரலைக் கேட்பதாலுண்டாகும் துயரம்.

---

191

[முல்லை]

தலைமகனது பிரிவு நீட்டித்தவழி தலைமகள் ஆற்றாளெனக் கவன்ற தோழிக்கு அவள் கூறியது.

உதுக்காண் அதுவே; இதுவென மொழிகோ ?
நேர்சினை யிருந்த இருந்தோட்டுப் புள்ளினம்
தாம்புணர்ந் தமையிற் பிரிந்தோ ருள்ளா
தீங்குர லகவக் கேட்டு, நீங்கிய
ஏதி லாள ரிவண்வரின் 'போதிற்
பொம்ம லோதியும் புனையல்;
எம்முந் தொடாஅல்' என்குவம் மன்னே.

(உரை). இதுகாண் நாம் அவருக்குச் சொல்லும் அது; இதனை இன்னதென்று நான் உனக்குச் சொல்லட்டுமா? (நம்மை விட்டுப்)பிரிந்து சென்ற அந்நியர் போன்ற தலைவர் தாம் சென்ற வழியினெதிரே பனையின் கிளையாகியபெரிய மடலின்கண் வாழும் ஆணும் பெண்ணுமாகிய அன்றிற் பறவைகள் தாம் புணர்ந்து இன்புற்றிருந்ததால், துணைவரைப் பிரிந்து தனித்துறைவார் படுந்துன்பத்தை நினையாது தீங்



குரலால் கூவக் கேட்டு (காமந் தலையெடுப்ப) இங்கு மீள்வாராயின், 'பொலிவுற்ற என் கூந்தலைப் பூவினால்அலங்கரித்தலும் வேண்டா; என்னையும் தொடல் வேண்டா' என்று சொல்வேன்.

'சினையிருந்தோடு' எனக் கூட்டுக. தோடு - பனைமடல். புள் - அன்றிற் பறவை. இனம்-இணை; ஆணும் பெண்ணுமாகிய இரண்டு. உள்ளா - உள்ளாது; முற்றெச்சம் என்றுவது, ஈறுகெட்ட வினையெச்சமென்றுவது கொள்க. 'கேட்டு' என்னும் வினையெச்சத்தை, (இவண்) 'வரின்' என்னும் வினையெச்சத்தோடு கூட்டுக. 'கேட்டு நீங்கிய' என்று கூட்டற்க. ஏதிலாளர் - அந்நியர், அயலார், உறவிலார்; stranger. தன்னைத் தனது உரிமையெனக் கருதாது அன்பின்றிப் பிரிந்தமையின் தலைவனை அவள் 'ஏதிலாளன்' என்றாள் என்க. போதின் - போதினால், போதையணிந்து. பொம்மல் - பொலிவு. தொடாஅல் - தொடால், தொடாதி; ஆலீற்று எதிர்மறை வியங்கோள். மன் - ஈற்றசை.

இப்பாட்டின் ஆசிரியர் பெயரும், இன்னுஞ் சிலவற்றினாசிரியர் பெயரும் ஏட்டுப்பிரதிகளில் காணப்படாமையால் அறியக்கூடவில்லை.

---

கச்சிப்பேட்டு நன்னாகையார்] 192 [பாலை

தலைமகனது பிரிவிடை ஆற்றாளாகிய தலைமகள் தன்னை ஆற்றுவித்தற்பொருட்டு வற்புறுத்துந் தோழியின் வன்புரைக்கு எதிரழிந்து கூறியது.

' ஈங்கே வருவர், இனையல், அவர்' என
' அழாஅற்கோ இனிய நோய்நொந் துறைவி,
மின்னின் றூவி யிருங்குயில் பொன்னின்
உரைதிகழ் கட்டளை கடுப்ப மாஅச்சினை
நறுந்தாது கொழுதும் பொழுதும்
வறுங்குரற் கூந்தல் தைவரு வேனே'

(உரை). தோழீ, நீ என்னை, 'மின்னலைப்போல ஒளிரும் தமது சிறகுகள் பொன்னையுரைத்த துகளால் விளங்கும் கட்டளைக்கல்லை ஒக்கும்படி கருங்குயில்கள் மாமரத்தின் கிளையிலிருந்து மாம்பூவின் நல்ல மகரந்தத்தைக் கோதிக்குடையும் இளவேனிற்காலத்திலும் இனிய காமநோயால் துன்புற்று உறைபவளே, உனது அழுகையைத் தவிர்த்தருள். உன் காதலர் இன்றே இங்கு வந்திடுவார்; நீ வருந்தாதே' என்று சொல்லக் கேட்டும் (அதனைத் தெளியாது)நான் பூவின்றி வறுமையுற்ற எனது கூந்தலைத் துயரமிகுதியால் தடவுவேன்.

ஈங்கு - இவ்விடத்து, இப்பொழுது என இடம் காலம் இரண்டையும் குறித்து நின்றது. அழாஅல் - அழால், அழுதல், அழுகை ('ஆல்' ஈற்றுத் தொழிற்பெயர்.) அழாற்கு - அழுகைக்குப் பகையாக, பரிகாரமாக என்று ஒரு சொல் வருவிக்க. ஓ - அசை. இருங்குயில், இருமை - கருமை. பொன்னின் கட்டளை - வண்ணக்கர் பொன்னை உரைத்துப்பார்க்கும் உரைகல்; the touchstone;. கருநிறத்தாலும் பொன்னின் நுண்ணிய துகள்கள் படிந்திருத்தலாலும்,அது குயிலின் மாந்தாது படிந்த கருந்தூவிக்கு உவமை ஆயிற்று. கருங்குயில் மாம்பூவைக்குடைந்து நறுந்தாதைக் கோதும் 'பொழுது' என்றமையால் 'இளவேனிற்காலம்' என்றும். வறுங்குரல் - குரல் வறுமையுற்ற. குரல் - பூங்கொத்து. கணவரைப் பிரிந்து தனித்துறையும் மகளிர் நன்னீராடல், நல்லுடையுடுத்தல், பொற்கலனணிதல், நறுமலர் சூட்டிக் கூந்தலை வாரி முடித்தலாகிய கோலங்களைத் தவிர்தல் மரபாதலின் 'வறுங்குரற் கூந்தல்' என்றாள். கூந்தலை வாளா தடவுதல் துயருற்றுக் கையாறெய்திய மகளிர் செய்கை.

'வருங்குரற் கூந்தல்' என்ற பாடத்துக்கு 'மணம் வரும் பூக்கொத்தை அணிந்த கூந்தல்' எனப் பொருள் கொள்க.

அரிசில் கிழார்] 193 [முல்லை

தலைமகனுக்குந் தலைமகளுக்கும் கடிமணம் நிகழ்ந்த நாளில் மணமனையிற் புகுந்து தலைமகளையுற்று, 'நலந் தொலையாமே நீ நன்காற்றி இருந்தாய்' என்று தன்னைப் பாராட்டிய தோழிக்கு அவள் உரைத்தது.

மட்டம் பெய்த மணிக்கலத் தன்ன
விட்டுவர்ச் சுனைய, பகுவாய்த் தட்டை
பறையிற் கறங்கு நாடன்,
தொல்லைத் திங்கள் நெடுவெண் ணிலவின்
மணந்தனன் மன்னெனன் தோளே;
இன்று முல்லை முகைநா றும்மே.

(உரை). மதுவை வார்த்த நீலரத்ன வட்டிலைப்போன்ற மலர்ந்த செந்நிறப் பூக்களையுடைய சுனைகளை உடையதும், (புனங்காப்பவர் கிளிகடியுங் கருவியாகிய) பல பிளப்பினையுடைய தட்டைகள் பறையைப் போன்றொலிக்கப் பெற்றதுமான மலைநாடனாகிய தலைமகன் முன்னாள் (உன்னுடைய உதவியாலும் முயற்சியாலும் அன்றே) சந்திரனது நீண்ட வெண்ணிலவொளியிலும் (இடையீடின்றி) என் தோள்களைத் தழுவிக் கூடியது. அதனாலன்றோ இன்று எனதுகற்பாகிய அரும்பு மலர்ந்து மணம்பெறலாயிற்று?

மட்டம் - மட்டு, தேன், மது. விட்டுவர் - விள் + துவர்- விள் - விண்ட, மலர்ந்த. துவர் - செந்நிறம், இங்குச் செம்மலர் (ஆகுபெயர்). தட்டை - மூங்கிலைப் பிளந்து தட்டி ஒலியையெழுப்பும் ஒருவகைக்கிளிகடி கருவி. முல்லை-கற்பு. முகைநாறும் - முகை மலர்ந்து மணம் வீசும்.

---

கோவதத்தனார்] 194 [முல்லை

கார்ப்பருவ வரவின்கண் தலைவன் வாராமையால் ஆற்றாளெனத் தன்னைக் குறித்துக் கவன்ற தோழிக்குக் கிழத்தி கூறியது.

என்னெனப் படுங்கொல், தோழி? மின்னுவர
வலனேர் பிரங்கு மென்றோ டதனெதிர்
கான மஞ்ஞை கடிய வேங்கும்;
ஏதில கலந்தவிரண் டற்கென்
பேதை நெஞ்சம் பெருமலக் குறுமே.

(உரை). தலைவர் இன்னும் வாராமைக்குக்காரணம்என்னவென்று கருதுவது? மின்னல் மின்னுவதால், தாழைகள் வீறுகொண்டு பூத்து (காற்றிலசைந்து) ஒலிக்கின்றன. அம்மின்னலைக்கண்டு அதனெதிரில் காட்டிலுள்ள மயில்கள் மிகவும் கத்துகின்றன. இவ்வாறு ஒன்றற்கொன்று சம்பந்தமின்றி ஒருங்கு நிகழும் இவ்விரண்டு நிகழ்ச்சிகளாலும் எனது பேதை நெஞ்சம் மிகவும் கலங்காநின்றது.

மின்னு - மின், மின்னல். வலன் நேர்பு - வலிமையுற்று; அல்லது வலன் ஏர்பு - வலிமையுடன் எழுந்து. வலன்- வலம், வலிமை. தோடு - பூவிதழ். மின்னலைக்கண்டு தாழை பூத்தல் இயல்பாதலின், இங்கே 'தோடு' என்பது 'தாழை' எனக்கொள்ளப்பட்டது. தாழை நெய்தலுக்கும் மயில் குறிஞ்சிக்கும் உரியவாதலின் 'ஏதில கலந்த இரண்டு' என்றாள்.

---

தோதானர்] 195 [நெய்தல்

தலைவனது பிரிவிடை மாலையம்பொழுது கண்டு தலைமகள் இரங்கிக் கூறியது.

சுடர்சினந் தணிந்து குன்றஞ் சேரப்
படர்சுமந் தெழுதரு பையுண் மாலை,
யாண்டுளர் கொல்லோ வேண்டுவினை முடிநர்;
இன்னா திரங்கும் என்னார், அன்னோ,
தைஇ யசைவளி மெய்பாய்ந் தூர்தரச்
செய்வுறு பாவை யன்னவென்
மெய்பிறி தாகுத லறியா தோரே.

(உரை). 'சூரியன் வெப்பந்தணிந்து அத்தகிரியைச்சார, வருத்தத்தைச் சுமந்துகொண்டு வரும் துயரத்தை விளக்கும் மாலைப்பொழுது (தனித்துறையும் தலைவிக்கு) துன்பந்தருவதாகும்; அப்பொழுது அவள் வருந்துவாள்.' என்று எண்ணுராகி, குளிர்ச்சி மிக்கு வீசுங் காற்று உடலின் மேலுறுதலால் (புனைவல் கம்மியனுற்) செய்யப்பட்டபாவையைப் போன்ற எனது மேனி வேறுபடுதலை அறியாராகிய தலைவர் தான் செய்யக் கருதிய காரியத்தை முடிக்க விரும்பினராகி, அந்தோ, இப்பொழுது எவ்விடத்துள்ளார் கொல்லோ?

சுடர் - (ஆகுபெயர்) சூரியன். சினம், (ஆகுபெயர்) சூடு, வெப்பம். குன்றம் - மேற்றிசையிலுள்ள அத்தகிரி. பையுள் - துன்பம், துயரம். 'மாலை இன்னுது, (தலைவி) இரங்கும் (இரங்குவாள்)' என்னுர். முடிநர், என்னுர், முற்றெச்சங்கள். 'அறியாதோர் யாண்டுளர்'என வினைமுடிக்க. தைஇவளி - முன் பனிக்காலமாகிய தைத்திங்களின் தன்மையாகிய குளிர்ச்சிமிக்க காற்று. 'தைஇ', ஆகுபெயர்.

மிளைக்கந்தனுர்] 196 [மருதம்

பரத்தையிற் பிரிந்து மீண்டு தன்னை வாயில்வேண்டிப் புக்க தலைமகனுக்குத் தோழி உரைத்தது.

வேம்பின் பைங்காய் என்றோழி தரினே
தேம்பூங் கட்டி என்றனிர்; இனியே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கட் டண்ணிய தரினும்
வெய்ய, உவர்க்கும் என்றனிர்;
ஐய, அற்றால் அன்பின் பாலே.

(உரை). ஐய, (முந்திக் களவுக்கூட்டக் காலத்தில்) என் தோழியாகிய தலைமகள் வேம்பின் பசுங்காயை உமக்குக் கொடுத்தாளாயினும், அதனை இனிய கருப்பங்கட்டி என்று ஏற்று உண்டீர்; இப்பொழுது 'பாரி' என்னும் வள்ளலின் மலையிடத்துள்ள குளிர்ந்த சுனையின் தெளிந்த, இனிய, தைத்திங்களைப்போல மிகக்குளிர்ந்த நீரைத்தந்தாளாயினும், வெப்பமுடையது, உவர்ப்புடையது என்று ஏற்காது மறுக்கின்றீர்; ஐய, உமக்குத் தலைமகளிடத்துள்ள அன்பின் பகுதி இப்பொழுது அத்தன்மைத்தாய்விட்டது.

'என்றோழி' என்றது தலைமகளை. தேம் -தேன், கருப்பஞ்சாறு. பூ-பொலிவு, இனிமை. அற்றால்-அற்று,(ஆல்,அசை). இனி-இப்பொழுது: தைத்திங்கள்' முன்பனிக்காலமாகையால் குளிர்ச்சி மிக்கிருத்தல் இயல்பு. 'தைஇ நின்ற தண்பெயற் கடைநாள்' (அகம், 24) என்றூர் பிறரும்.

# அப்பர்

## அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

## 12. இரத்தினப் பரிட்சை.

[725-வது பக்கத்தொடர்ச்சி]

### 3. மாணிக்கங்கள்.

"கல்லெல்லாம் மாணிக்கக்கல்லாமோ" * என்பது, உலகவழக்கில் நாம் அடிக்கடி கேட்கும் ஒரு தொடர்மொழியாம். ஏனெனில், பன்னிரு குணங்களில் (சில வயிரம் முதலியவற்றிற்குப் பொருந்தினும்) மாணிக்கம் மிகச் சிறந்ததென்று நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. அவை பின்வருமாறு:—

"மின்னிய நெருப்பிற் சேரினுந் தகட்டின்
மேவினும் வெயிலினுங் கரத்து
மன்னினு மோரந் தன்னினுந் தூக்க
மருவினுந் தேய்ப்பினும் பிறங்கிக்
கொன்னுறச் சிவந்து பார்க்கவந் தோங்கிக்
குச்சிமுன் பரந்துசேர்ந் திடின்முன்
பன்னிய வொளித்தாய் மத்தக சுத்தி
யுடையது பன்னிரு குணமால்."
திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்.

இக்குணங்கள் தேவாரத்தில் பற்பல விடங்களிலும் குறிப்பிட்டும் விரித்தும் வகுத்தும் காட்டப்பட்டன. திருநாவுக்கரசும், "பளிங்கி னிழலுட் பதித்த சோதி" மாணிக்கச் செழுஞ்சுடரெனச் சிவபிரானை உருவகப்படுத்துவது காண்க:—

பளிங்கினிழ லுட்பதித்த சோதி யானைப்
பசுபதியைப் பாசுபத வேடத் தானை
விளிந்தெழுந்த சலந்தரனை வீட்டி னானை
வேதியனை விண்ணவனை மேவி வையம்
அளந்தவனை நான்முகனை யல்ல றீர்க்கு
மருமருந்தை யாமா றறிந்தே னுள்ளம்
தெளிந்தெறும்பி யூர்மலை மேல் மாணிக் கத்தைச்
செழுஞ் சுடரைச் சென்றடையப் பெற்றே னானே.
திருவெறும்பியூர் - திருத்தாண்டகம் 2.

சிவபெருமான் பளிங்கில் உற்பத்தியாகும் மாணிக்க மாலைகளை யணிந்து விளங்குவரென்றும் அப்பர் பாடுவார்:—

மங்குன் மதிவைப்பர் வான நாடர்
மடமா னிடமுடையர் மாத ராளைப்
பங்கின் மிகவைப்பார் பால்போ னீற்றர்
பளிக்குவடம் புனைவர் பாவ நாசர்
சங்கு திரையுகளுஞ் சாய்க்கா டாள்வர்
சரிதை பலவுடைய தன்மை சொல்லின்
எங்கும் பலிதிரிவ ரென்னு ளீங்கா
ரிடைமருது மேவி யிடங்கொண் டாரே.
திருவிடைமருதூர்-திருத்தாண்டகம் 2

மற்றோர் இடத்தில் திருநாவுக்கரசுநாயனுர் சிவபெருமானை மாணிக்கம்போல் "சோதி மிக்க உரு" எனப் புகழ்வார்:—

திருவே! யென் செல்வமே! தேனே! வானோர்
செழுஞ்சுடரே! செழுஞ்சுடர் நற்சோதி மிக்க

* பொன்மணியம் பூங்கொன்றை மாலை யானைப்
புண்ணியனை வெண்ணீறு பூசி னானைச்
சின்மணிய மூவிலைய சூலத் தானைத்
தென்சிராப் பள்ளிச் சிவலோகனை
மன்மணியை வான்சுடலை யூராப் பேணி,
வல்லெருதொன் றேறு மறைவல் லானைக்
கன்மணிகள் வெண்டிரைசூழ்ந்த னாகைக்
காரோணத் தென்றொன்றுங் காண லாமே.
திருநாகைக்காரோணம் - திருத்தாண்டகம் - 7.



உருவே! யென் னுறவே! யென் னூனே! யூனி
னுள்ளமே! யுள்ளத்தி னுள்ளே நின்ற
கருவே! யென் கற்பகமே! கண்ணே! கண்ணிற்
கருமணியே! மணிபாடு பாவாய்! காவாய்
அருவாய வல்வினைநோ யடையா வண்ண
மாவடுதண் டுறையுறையு மமர ரேறே.
திருவாவடுதுறை—திருத்தாண்டகம் 1

மாணிக்கத்தின் உருவம் † பருத்திருக்க வேண்டுமென்னும் கருத்தையொட்டி அப்பர் திருவாய்மலர்ந்தருளும் பாசுரங் காண்க:—

வருமிக்க மதயானை யுரித்தான் றன்னை
வானவர்கோன் றோளனைத்து மடிவித் தானைத்
தருமிக்க குழலுமையாள் பாகன் றன்னைச்
சங்கரனெம் பெருமானைத் தரணி தன்மேல்
உருமிக்க மணிமாட நிலாவு வீதி
யுத்தமர்வாழ் தருமோம மாம்புலியூர் மன்னும்
திருமிக்க வடதளியெஞ் செல்வன் றன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே.
திருவோமமாம்புலியூர் - திருத்தாண்டகம் 2.

மாணிக்கங்களில், கோமளம், குருவிந்தம், பதுமராகம், பணுமணி ‡ யென்னும் நான்கையே பெரும்பற்றப் புலியூர்நம்பி* இனங்களெனப் பகர்வர். இவற்றுள் பணுமணி யென்பது நாகரத்தினம். முற்றிய பாம்புகளிடம் இவை யுண்டென்பது தமிழ்ப்புராண நம்பிக்கை. (ஆரியத்திலும் இதை யேற்பர்.)

ஆருமெதி ராதவலி யாகியச
லந்தரனை யாழியத னால்
ஈரும்வகை செய்தருள் புரிந்தவ
னிருந்தமலை தன்னைவின வில்
ஊருமர வம்மொளிகொண் மாமணி
யுமிழ்ந்தவை யுலாவிவர லால்
காரிருள்க டிந்துகன கம்மென
விளங்குகா ளத்தி மலையே. சம்பந்தர்.

சுடுமணி யுமிழ்நாகஞ்சூழ்தர வரைக்கசைத்தான்
இடுமணி யெழிலானை யேறல னெருதேறி
விடமணி மிடறுடையான் மேவிய நெடுங்கோட்டுப்
படுமணி விடுசுடரார் பருப்பதம் பரவுதுமே.
சம்பந்தர்.

இரவியு மதியும் விண்ணும் இருநிலம் புனலுங் காற்றும்
உரகமார் பவன மெட்டுந் திசையொளி யுருவமானுய்!
அரவுமிழ் மணிகொள் சோதி யணியண்ணு மலையுளானே
பரவுநின் பாத மல்லாற் பரமநான் பற்றி லேனே.
திருவண்ணுமலை - திருநேரிசை - 7.

குருவிந்தம் * என்பது கெம்பு. ஆயினும் இந்தக் காலத்தில் சுத்தமான முயல்ரத்தம் போன்றதும் நெருப்புப் போல் திகழ்வதும் ஆன குருவிந்தம் கிடைப்பது அரிது. அப்பர் காலத்தில் மாலைகளில் இதுசாதாரணமாய்க் காணக்கூடியதாம். திருப்பருப்பதமலையை வர்ணிக்கும் வன்றொண்டர்பதிகம் காண்க:—

ஏனத்திரள் கிளைக்கவெரி போலமணி சிதறத்
தீயென்றவை மலைச்சாரலிற் றிரியுங்கர டியும்
மானும்மரை யினமும்மயின் மற்றும்பல வெல்லாம்
தேனுண்பொழில் சோலைமிகு சீபர்ப்பத மலையே.
சுந்தரர்-தேவாரம்.

அவ்வாறே புகலிவேந்தரும் பாடுவது காண்க:—

வரிவள ரவிரொளி யரவரை தாழ
வார்சடை முடிமிசை வளர்மதி சூடிக்
கரிவளர் தருகழல் கால்வல னேந்திக்
கனலெரி யாடுவர் காடரங் காக
விரிவளர் தருபொழி லிளமயி லால
வெண்ணிறத் தருவிக டிண்ணென வீழும்
எரிவள ரினமணி புனமணி சாரல்
இடைச்சுர மேவிய விவர்வண மென்னே!
திருவிடைச்சுரம்-பண், குறிஞ்சி 1.

சிவபெருமான் (குருவிந்தம்போல்) நெருப்பு உருவமாய் விளங்குவாரென அப்பர் கூறுவர்:—

உடலின் வினைக ளறுப்பாய் போற்றி!
யொள்ளெரி வீசும் பிரானே போற்றி!
படருஞ் சடையின் மதியாய் போற்றி!
பல்கணக் கூத்தப் பிரானே போற்றி!
சுடரிற் றிகழ்கின்ற சோதீ! போற்றி!
தோன்றி யென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கடலொளி யாய முத்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.
திருக்கயிலாயம்-திருத்தாண்டகம். 4

குருவிந்தமும் பணுமணியும் நீங்கலாக, கோவாங்கு என்னும் மாணிக்கம், கோவைப்பழம் நல்ல செங்கல் மஞ்சள் இவைபோன்றதென்பர். "பொன்போல மிளிர்வதோர் மேனி" யுடைய உமாபதியைக் "கதிர் விடு மாமணி பிறங்கு கனகச் சோதி" என்ற விடத்தில் இம்மாணிக்கத்தை எண்ணியதாகத் தோற்றுகின்றது:-

கந்தமலர்க் கொன்றையணி சடையான் றன்னைக்
கதிர்விடுமா மணிபிறங்கு கனகச் சோதிச்
சந்தமலர்த் தெரிவையொடு பாகத் தானைச்
சராசரநற் றயானை நாயேன் முன்னைப்

† செம்பொன்னை நன்பவளந் திகழு முத்தைச்
செழுமணியைத் தொழுமவர்தஞ் சித்தத் தானை
வம்பவிழு மலர்க்கணையே னுலக்க நோக்கி
மகிழ்ந்தானை மதிற்கச்சி மன்னுகின்ற
கம்பனையெங் கயிலாய மலையான் றன்னைக்
கழுகினொடு காகுத்தன் கருதி யேத்தும்
நம்பனையெம் பெருமானை நாதன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே
திருநாரையூர் - திருத்தாண்டகம் 4

‡ புனமுடை நறுமலர் பலகொடு தொழுவதொர் புரிவினர்
மனமுடை யடியவர் படுதுயர் களைவதொர் வாய்மையர்
இனமுடை மணியினொ டரசிலையொளிர்பெறமிளிர்வதோர்
சினமுதிர் விடையுடை யடிகடம் வளநகர் சேறையே.
சம்பந்தர்.

* துணியுடையர் தோலுடைய ரென்பர் போலுந்
தூயதிரு மேனிச் செல்வர் போலும்
பிணியுடைய வடியாரைத் தீர்ப்பார் போலும்,
பேசுவார்க் கெல்லாம் பெரியார் போலும்
மணியுடைய மாநாக மார்பர் போலும்,
வாசுகிமா நாணுக வைத்தார் போலும்
அணியுடைய நெடுவீதி நடப்பர் போலு
மணியாரூர்த் திருமூலட் டான னாரே.
திருவாரூர் - திருத்தாண்டகம் - 3

* பருமாமத கரியோடரி யிரியும் விரிசாரல்
குருமாமணி பொன்னேடிழி யருவிக்கொடுங் குன்றம்
பொருவெயில் வரைவிற்றரு கணையாற்பொடி செய்த
பெருமானவ னுமையாளொடு மேவும் பெருநகரே.
சம்பந்தர்

பந்தமறுத் தாளாக்கிப் பணிகொண் டாங்கே
பன்னியநூற் றமிழ்மாலை பாடு வித்தென்
சிந்தைமயக் கறுத்ததிரு வருளி னானைச்
செங்காட்டங் குடியதனுட் கண்டே னானே.

திருச்செங்காட்டங்குடி - திருத்தாண்டகம் - 4.

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற வெளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தன் கண்டாய்
மறைக்காட் டுறையு மணாளன் றானே.

திருமறைக்காடு - திருத்தாண்டகம் - 1.

மாணிக்கங்களில் மிகவும் சிறந்தது, தாமரை, * கழுநீர், மின்மினிப்பூச்சி, மாதுளைப்பூ, மாதுளைவிதை, நெருப்பு, கொடிய பிரகாசமுள்ள விளக்கு இவற்றைப் போன்று விளங்குஞ் சாதுரங்கமென்னும் பதுமராகமாம். இக்காலத்தில் இது காணவரிதாயிருக்கின்றது. ஆயினும் இத்தகைய மாணிக்கம் நமது நாட்டில் முற்காலத்தில் வணிகரிடமிருந்ததென்பது பற்பல நூல்களின் வாயிலாகக் காண்கின்றோம். மையுணஞ்சமிடற்றர், தையல்பாக மமர்ந்து விளங்குவது இத்தகைய மாணிக்கம் மரகதத்திடைவதிவது போலும்:—

நெய்த லாம்பல் கழுநீர் மலர்ந்தெங்கும்
செய்கண் மல்கு சிவனார் திருப்பத்தூர்த்
தையல் பாக மகிழ்ந்தா ரவர்போலும்
மையு ணஞ்சம ருவமி டற்றரே.

சம்பந்தர்

தொண்டர டித்தொழலுஞ் சோதி யிளம்பிறையுஞ்
சூதன மென்முலையாள் பாகமு மாகிவரும்
புண்டரிகப் பரிசா மேனியும் வானவர்கள்
பூசலி டக்கடனஞ் சுண்ட கருத்தமரும்
கொண்டலெ னத்திகழும் கண்டமு மெண்டோளும்
கோலந றுஞ்சடைமேல் வண்ணமுங் கண்குளிரக்
கண்டுதொ ழப்பெறுவ தென்றுகொ லோவடியேன்
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே.

சுந்தரர்

*சுந்தரர் சிவபெருமானை வர்ணிப்பதில் தாமரை போன்ற திருமேனி என்றபோது, இம்மாணிக்கத்தை யெண்ணியுமிருக்கலாம்:—

# மாதவி மாதவம்

[727 - வது பக்கத் தொடர்ச்சி]

அறவணடிகளும் இராசமாதேவியும்.

**ம**ணிமேகலை சிறைப்பட்டமை மாதவி யறிந்தாள். மனமாழ்கினாள், கண்ணீர் பெருக்கினாள், வெய்துயிர்த்து விம்மினாள், காதல னிறந்ததுயரினும் கழிபெருந்துயர் விளைத்த திச் செயல். கடந்த ஞானியுங் கடப்பரோ மக்கள்மேற் காதல்? சுதமதிபால் உரைத்தாள். அவள்தான் என்செய்ய வியலும்? அவளும் உடன்சேர்ந் தரற்றினாள். பின்னர் இருவரும் அறவணவடிகளை யண்மி, அவரடி வணங்கி நிகழ்ந்ததுரைத்தனர். “அஞ்சேல்! அஞ்சேல்!! நும்மகட்கொரு தீங்கும் நேராது. நிகழ்வனயாவும் அவன் திருவருளே. அவன் திருவருளிலும் நவைதான் உண்டோ?

கண்கொடுத்தான் தடிகொடுத்தான்
கயப்புலிக்குத் தற்கொடுத்தான்
பெண்கொடுத்தான் உடம்பினையும்
பிளந்திட்டுப் பிறர்க்கீந்தான்
மண்கொடுத்தான் மகக்கொடுத்தான்
மன்னுந்தற் சேர்ந்தார்க்கு
விண்கொடுத்தான் அவன்பெருமை
விரித்துரைக்க வேலாவே

எனத் தேற்றி, அவ்விருவரும் உடன்வர இராசமாதேவியை யடைந்தனர். இவர் வருகையைக் கண்ட தேவியார் மணிமேகலையொடு எதிர்சென்று வணங்கி “யாண்டுபல புக்க நும் இணையடி வருந்த என் காண்டகு நல்வினை நும்மை யீங்கழைத்தது! நாத்தொலைவில்லாயாயினும் தளர்ந்துமூத்த விவ் யாக்கை வாழ்க பல்லாண்டு!” எனப் போற்றினள். அடிகள் மிகவும் மகிழ்சிறந்து,

அருணெறியிற் பாரமிதை
யாறைந்து முடனடக்கிப்
பொருண்முழுதும் போதிநிழல்
நன்குணர்ந்த முனிவரன்றன்
அருண்மொழியால் நால்வாய்மை
யறிந்தவரே பிறப்பறுப்பார்
மருணெறியாம் பிறநூலும்
மயக்கனுக்கு மாறுளதோ?

ஆதலின், ஆதிமுதல்வ னருளிய புரைதீர் நல்லறம் போற்றிக்கேட் டுய்மின்” என்று இருவினைப்பயனும் எடுத்தியம்பி, மாதவியும் அவள்மகளும் சுதமதியும் உடன்வர இராசமாதேவியிடம் விடைபெற்று மீண்டார். பின்னர் அடிகள் மணிமேகலையை நோக்கிப் “பிறசமயத் திறனெல்லாம் நீ யறிந்தபின்னர், அறமொழியின் விரிவெல்லாம் நினக்குரைப்பன்; ஆதலினால், இன்றே இந்நகர்விடுத்து வஞ்சிநகர்புக்குப் பல்சமயத்தாரிடமும் வெல்போர் நிகழ்த்தி, ஆங்கே உன் அன்னையாம் கண்ணகியார்தம்மை, அந்நாட்டு மன்னவர்கோன் கன்னட்டியுள்ளான். அப் படிவந்தனைத் தொழுது ஆசிபெற்று மீண்டு, எனையடைவாய். எம்பெருமானருளிய செம்மொழியின் திறனனைத்தும் யானுனக்குத் தெரிய வுரைத்திடுவேன்” என்று கூறினர். மணிமேகலை வஞ்சிநோக்கி வானூ டெழுந்தாள்.

* * * *

காவிரிப்பூம்பட்டினம் கடல்கோட் படுதல்.

மாதவிநல்லாள் அறவணவடிகளிடத்தே தருமவுரைகேட்டுப் போதிமூலம் பொருந்தியிருந்த நாதம்பாதமே நனவிலும் கனவிலும் சிந்தித்து வந்தித்து வந்தாள். இங்ஙனம் நாள் பல சென்றன. முன்னர்



ஓர் ஆண்டு நிகழ்ந்த இந்திரவிழாவினால் மாதவி காதலனைப் பிரிந்து துறவுபூண நேர்ந்தது. பின்னர் நிகழ்ந்த கோடணையால் உதையகுமரனை யேதுவாகக்கொண்டு அவள்மகள் துறவுநெறி விழைந்தமை யறிந்தோம். இங்ஙனம் இவ்விழா நிகழ்ந்தமையின் நேர்ந்தன அவையெனின், இனி யவ்விழாவினை அயர்ந்தமையின் நேர்ந்த திதுவெனக் காட்டி இம் மாதவியின் காதற் சரிதையை முடிப்போம்.

வெல்வேலண்ணல் நெடுமுடிக்கிள்ளி இளவேனிற் பருவத்து ஒருநாள் பொழில்விளையாட்டு விரும்பி, தன் பரிவாரத்தொடு போதவிழ் பூம்பொழில் புகுந்தனன். ஆங்கே கொம்பர்த் தும்பி குழலிசை காட்டப் பொங்கர் வண்டினம் நல்லியாழ் செய்ய, வரிக்குயில்பாட, மாமயிலாடும் விரைப்பூம்பந்தர்கண்டு உளஞ் சிறந்தும்; கோங்கலர் சேர்ந்த மாங்கனி தன்னைப் பாங்குறவிருந்த பல்பொறி மஞ்ஞையைச் செம்பொற்றட்டில் தீம்பாலேந்திப் பைங்கிளிக் கூட்டுமோர் பாவையா மென்னும் அணிமலர்ப் பூம்பொழில் அகவயினிருந்த, பெண்குரங்கேற்றிப் பெருமதர் மழைக்கண் மடவோர்க் கியற்றிய மாமணியூசல், கடுவன் ஊக்குவது கண்டுநகையெய்தியும், பொழில்வளங் கண்டுவருகையில், விண்ணவர் மகளோ மண்ணுறையணங்கோ, கண்ணிறை வனப்பொடு பெண்கொடியொருத்தி, அப் பூநாறு சோலையில் யாருமில் ஒரு சிறைத் தானேதமியளாய் நின்றனள். அன்னவளைக் கண்ட அரசன் தன்னறிவிழந்து அநங்கன் கொடுமைக் கெளியனானன்.

“பூங்கொடி! நீ யார்? புகுந்தது ஈங்கென்?
வேண்டுவ பகரின் விரைவில் முடிப்பன்”

எனத் தான் அவளை இன்னாளென அறிதற்கு முன்னரே அவள்குறை நிறைப்பான் போன்று, நஞ்சினுங் கொடிய எண்ணத்தை நெஞ்சினுள் மறைத்துச் சொன்னான்.

“யாராயினும் என்? எனக்கொரு குறையிலை!
மற்றிப் பூம்பொழில் புக்கது தவறேயாயின்
அடிச்சியை மன்னித் தருள்புரிந் திடுக”

என்றனள் அப் பொன்திகழ்மேனி நல்லாள்.

“பாவாய்! பாவாய்! பகரல் அங்ஙனம்
இம்மலர்ச் சோலை யெளியன தாயினும்
பொழில்வளங் காண்பா ரனைவர்க்கும் பொதுவே;
மற்றுனக் கொருகுறை யிலையாயினும் நல்லாய்!
எனக்கொரு குறையுண் டியம்பின் இசைவையோ?”

என்றனன் மன்னன். கரியகூந்தலின் சிறுசுருள் பிறைநிகர்நறுநுதற் புரள, பொருசிலைப் புருவம் ஒருதலை நெகிழ்த்துச் செவ்வரிபடர்ந்த மைவழிநெடுவிழி உழுவலோ டவன்முகம் நோக்க எழுங்கால், அவன் நோக்கு எதிர்ப்படத் தன்னேக்ககற்றி வெய்யோன் வாரியில் விழுங்கால் துய்ய சேணிடைத் தோன்றும் செக்கர்போல் கன்னம் நாணொடு சிவப்ப, ஊர்கோள் நாப்பண் தோன்றிய உவாமதிபோன்று அங்கு எழிலொளி சுற்றிய வதனம் சற்றுக் கவிழ்த்து, அமுத ஊற்றிருக்குங் குமுதவாயலர்ந்து, மந்தகாசம் தந்து அவளினிது நின்றனள். அரசன் புத்துயிர்பெற்று, சித்திரப்பாவையொத்த அச்செல்வியை நோக்கி “பெறற்கரும்பேறே! இனிநம் ஈருயிரும் ஒருயிரே” எனக்கூறி, இறுகப் புல்லி உடலிரண்டென்பதையும் பொய்யாக்கிப் பேதைமொழி பல புகன்று கோதையொடு கூடி வாழ்ந்தான். குறுங்கால்நகுலமும், நெடுஞ்செவி முயலும், பிறழ்ந்துபாய் மீனும், இறும்பகலா வெறியும் [குறுங்காடு நீங்கா ஆடு], வம்மெனக் கூஉய் மகிழ் துணையொடு தன் செம்மலர்ச் செங்கை காட்டுபு நின்று, எந்திரக்கிணறும் இடுங்கற் குன்றமும், வந்துவீ ழருவியும் மலர்ப்பூம் பந்தரும், பரப்புநீர்ப் பொய்கையும் கரப்புநீர்க் கேணியும், ஒளித்துறையிடங்களும் பளிக்கறைப்பள்ளியும் யாங்கணுந்திரிந்து தாழ்ந்து விளையாடிப் பொழுதுபோக்கினான். இங்ஙனம் ஒரு திங்கள் சென்றது. திங்கள் ஒன்று சென்றதேயன்றி, அம்மங்கைநல்லாள் தான் யாரென இன்னும் அரசற் குணர்த்திலள். அரசன் அவளை யறியப் பல்வகையானும் முயன்றும் அவன்முயற்சி வீணேயாயிற்று. பலர் தன் தாளினைத் பணிவது மறந்து, அவ் அலர்மகள் போன்றாள் அடியிணை தொழுது, அவள் வேண்டுவனயாவும் புரிந்து அரசன்ஒழுகியும், ஒருநாள் அப்பொற்கொடி யாரும் அறியாவகை மறைந்தனள். அரசன் ஊனும் உணர்வும் ஒழிந்து, பித்தனைப்போலப் பிதற்றிப் பற்பலவிடங்களில் தேடி யலைந்தான். அதுபொழுது, நிலத்திற் புகுந்து நெடுவிசும்பேறிச் சலத்திற்றிரியுமோர் சாரணன் தோன்ற, மன்னவன் அவனை வணங்கி முன்னின்று, “என்னுயிரனையாள் எளியனை விடுத்துத் தனியே மறைந்தனள், கண்டிரோ அடிகாள்! சொல்லுமின்” என்று தொழுதனன். அதற்கவன் “கண்டிலேனாயினும் காரிகைதன்னைப் பண்டறிவுடையேன் பார்த்திப, கேளாய்! நாகநாட் டரசன் வளைவணன் தேவி வாசமாலை வயிற்றுள் தோன்றிய பீலிவளையே நீகூறும் பெண்கொடி. ஆங்கவள் உதித்த அந்நாள், இரவிகுலத்தொருவன் இணைமுலைதோயக் கருவொடு வருஉமெனக் கணியெடுத் துரைத்தனன். ஆதலின் ஆயிழை யீங்கினி வாராள். எனினும் நினது புதல்வனை யடைகுவை, வருந்தல்! மற்றொன்றும் உணர்த்தற்குரியேன். தீவகச்சாந்தி செய்யாநாளன் காவன்மாநகர் கடல்வயிறு புகும்; ஆதலின், விண்ணவர்கோமான் விழாக்கோள் மறவேல்” என எடுத்துக் கூறிப்போயினன். அரசனும் ஒருவாறு மனந்தேறி தன் கோயிலடைந்து, தன்காதற்புதல்வனை யெதிர்நோக்கியிருந்தான்.

இங்ஙனம் ஓராண்டு கழிந்தது. மணிபல்லவத்தினின்றும் புகார்நோக்கிப் போந்த மரக்கலம் ஒன்று கடலிற் கவிழ்ந்தமையின் அதனின்றுந் தப்பிய சிலர் மன்னனை யடைந்து “வாழி! எங் கோமன்னவர் பெருந்தகை! கேள் இது மன்னே! கெடுகநின் பகைவர்! யாம் மணிபல்லவத்திருந்து, கம்பளச் செட்டிக் கலமேறி மீளுங்கால், வானுறைமகளோ மால்மருமகளோ, யாரென அறியேம், ஓர் பேரெழிலாட்டி, பைங்குழவியொன்றை யெங்கையி லீந்து, ‘கொற்றவன் மகனிவன் கொள்கெ’னக் கொடுத்தலும், பெருமகிழ்வோடு பெற்றனம். போந்தேம்; அந்தோ! கடலின் கொந்தளிப்பதனால், மரக்கலங் கவிழ்ந்தது; மகவினைத்தேடி, அலைந்தனம் அரசே! அந்தோ!” என்று மேலுரைக்க வியலாதவராய் விம்மிவிம்மி யழுதனர். இனி மன்னவன் நிலையை விரித்துரைத்தல் மிகையே. ஆயிழையை மறந்து சேய் நினைவே மிகுந்தான். மன்னுயிர் புரப்பதை விடுத்துத் தன் இன்னுயிர்ப் புதல்வனின் ஏக்கமே மிக்கான். கானலுங் கடலுங் கரையுமென்று யாவையும் ஒருங்கே தேடினன். அதனால், வானவர் விழாக்கோள் தன்னையு மறந்தான். “விண்ணவர் கோமான் விழாக்

கோள் மறப்புழி அணிநகர்தன்னை யலைகடல் கொள்கென ", மணிமேகலையெனும் தெய்வம் அன்று இட்ட சாபம் பட்டததனால், கடவுண்மாநகர்க் கடல்கொளத் தொடங்கிற்று.

எழில்மிகு வடிவுடை யிளங்கோ முன்னர் மாதவி மகளை விரும்பி நின்றதும்; அதனால் அச் செல்வக் கோமகன் வஞ்சவிந்தைசயன் வாளால் விளிந்ததூஉம்; ஒருசிலர் அதனைத் தன்பாற்கூற "மாதவர் நோன்பும் மடவார் கற்பும், காவலன் காவல் இன்றெனின் இன்றால்; மகனை முறைசெய்த மன்னவன் வழியோர், துயர்வினையாளன் தோன்றினன் என்பது, வேந்தர்தம் செவியுறுவதன் முன்னம் ஈங்கிவன்றன்னை யீமத் தேற்றுக" என மொழிந்த நெடுமுடிக்கிள்ளி, முன்னரே ஓர் மனைவியையுடைய மன்னன், அவளொடு கூடி அருந்திறற் புதல்வனொருவனை யீன்று தந்தையானன். முன்பின்னறியா ஒருத்தியை வேட்டு, அதனால் அணிநகர்தன்னைக் கடற்கிரையாக்கினன் எனின், மாவண்கிள்ளியோ மற்றவன் புதல்வனோ யாவரேதவறுடையாரென்பதை யீண்டெடுத்துரைத்தல் வேண்டா. எனினும், தன் அருமருந்தன்ன புதல்வன் இறந்ததற் கெட்டுணையு மிரங்காது, இனிப் பெரும்பழிக்காளானது நோக்க, அந்தோ! அம்மன்னவனின் கழிபெரும் மடமைக்கு இரங்குவதன்றி வேறென் கூறவல்லோம்?

* * * *

தாய்மகள் இருவரின் தனிப்பெரு வாழ்க்கை.

அணிநகர் தன்னை யலைகடல் சிறிதுசிறிதாக விழுங்கத் தலைப்பட்டதும், அறவணவடிகளும் மாதவியும் சுதமதியும் அந்நகர் நீங்கி, மணிபல்லவம் வந்த தீங்கெனப், பொய்கையும் பொழிலும் புண்ணிய முதல்வனின் பாதபீடிகையும் பளிக்குமண்டபமும், மணிமேகலையெனுந் தெய்வமாதிற்கும், தீவதிலகையென்னு மணங்கிற்கும், கோட்டமும் பிறவும் எழிலுற அமைத்துள கச்சிமாநகர் புக்கனர். மாதவி மகளும் வஞ்சி நீங்கி, தன்தாயாரும் அடிகளும் கச்சிமாநகர் போந்தமை யறிந்து, அவணடைந்து அடிகளையும் அன்னையையும் தாள்பணிந்தேத்தினள். தாயு மகளுமாக, அங் கச்சிமாநகரிலேயே, அறவணவடிகளின் அறவுரை கேட்டு,

"எண்ணிகந்த காலங்கள்
எம்பொருட்டான் மிகவுழன்று
எண்ணிகந்த வுலகங்கள்
இருடீர ஒருங்குணர்ந்து
எண்ணிகந்த தானமும்
சீலமு இவையாக்கி
எண்ணிகந்த குணத்தினன்
எம்பெருமா னல்லனோ?

எறும்புகடை யயன்முதலா
எண்ணிறந்த என்றுரைக்கப்
பிறந்திறந்து யோனிதொறும்
பிரியாது சூழ்போகி
எவ்வுடம்பில் எவ்வுயிர்க்கு
யாதொன்றால் இடரெய்தின்
அவ்வுடம்பில் உயிர்க்குயிராய்
அருள்பொழியுந் திருவுள்ளம்;
இருட்பாரை வினைநீக்கி
யெவ்வுயிர்க்குங் காவலென
அருட்பாரந் தனிசுமந்த
அன்றுமுதல் இன்றளவும்
மதுவொன்று மலரடிக்கீழ்
வந்தடைந்தோர் யாவர்க்கும்
பொதுவன்றி நினக்குரித்தோ
புண்ணியநின் திருமேனி?"

என்று புத்ததேவனையே கனவிலும் நனவிலுங்காணுந் தெய்வமாக வாழ்த்தி வணங்கிவாழ்ந்தனர்.

முற்றிற்று.

# தமிழ்ப் பாடம் 139.

[730-வது பக்கத் தொடர்ச்சி]

## நைடதம்—நளன்தூதுப் படலம்

மண்ணினிற் சிறந்து வாழு
மன்பதைத் தொகுதி தன்னி
லெண்ணிடிற் சிறந்தா ரன்றோ
வியக்கரவ் வியக்கர் தம்மில்
விண்ணவர் சிறந்தா ரன்றோ
விண்ணவர் தமையு மாளு
மண்ணனின் னேவல் கேட்பி
னதனினுஞ் சிறந்த துண்டோ. 51.

(உரை). எண்ணிடில் - யோசிக்குமிடத்து, மண்ணினில் - இம்மண்ணுலகில், சிறந்து வாழும் - சிருஷ்டியில் உயர்ந்ததாய் வாழ்கின்ற, மன்பதைத் தொகுதி தன்னில்-மக்கள்தொகுதியைக்காட்டிலும், இயக்கர் - இயக்கரினத்தார், சிறந்தார் அன்றோ - சிறந்தவர்கள் அல்லரோ; அ இயக்கர்தம்மில்-அந்த இயக்கர்களைக் காட்டிலும், விண்ணவர்-வானுலகத்தாரான தேவர்கள், சிறந்தார் அன்றோ - சிறந்தவர்கள் அல்லரோ; விண்ணவர் தமையும் - அந்த வானுலகத்தாரையே, ஆளும் - அண்ணல் - தேவேந்திரனே, நின் ஏவல் - உனது ஏவலை, கேட்பின் - கேட்பானுல், அதனினும் சிறந்தது - அதைக்காட்டிலும் சிறப்புடையது, உண்டோ-வேறு ஒன்று உண்டோ. (உணர்).

விரிவுரை:—"மக்களைவிட யக்ஷர்களும், யக்ஷரைவிடத் தேவர்களும், அத்தேவர்களைவிட அவர் தலைவனை இந்திரனும், அவ்விந்திரனையே ஏவல் கொள்ள நிற்கின்ற நீயும் படிப்படியாய் உயர்ந்தவர்களாகின்றீர்" என்னு மிது மேன்மேலுயர்ச்சியணி. (2—693, 971)

தாதொடு நறவு தூற்றுந்
தருநிழ லினிது வைகி
மேதகு நிதியு மானும்
வேட்டன வுவந்து நல்க
வேதமி லரம்பை மாதர்
முறைமுறை யேவல் கேட்ப
நீதொழு மமரர் யாரு
நிற்றொழப் பணித்தி யென்றாள். 52.



(உரை). தாதொடு-மகரந்தப்பொடிகளொடு, நறவு - தேனையும், தூற்றும் - சொரிகின்ற, தருநிழல் - கற்பகத்தருவின் நிழலில், இனிது வைகி - இனிது அமர்ந்து, மேதகு - பெருமைதங்கிய, நிதியும் - சங்கநிதி பதுமநிதிகளும், ஆனும் - காமதேனுவும், வேட்டன - நீ விரும்பியவற்றை, உவந்து நல்க - மகிழ்ச்சியுடன் கொடுக்கவும்; ஏதம் இல் அரம்பை மாதர் - குற்றமில்லாத தெய்வப் பெண்கள், முறைமுறை ஏவல் கேட்ப-முறையே நீ இட்ட பணிகளைச் செய்யவும், (வீற்றிருந்து) நீ தொழும் அமரர் யாரும்- நீ இப்பொழுது வணங்கிவருகின்ற தேவர் அனைவரும், நின்தொழ - இனிஉன்னை வணங்கும்படி, பணித்தி-ஏவுவாய், என்றாள் - என்று தமயந்திக்கு அந்தத் தூதி சொன்னாள்.

விரிவுரை:—இந்திரனுடைய தூதி தன் செய்தியை மிக்க நயமுந் திறமையும் வாய்ந்த சொற்களால் இயம்புகின்றாள். "வானவர்க் கிறைவனை நீ மணத்தல்வேண்டுமென்று அவள் வெள்ளையாய் எடுத்தியம்பாமல் அப்பொருள் பயக்கும்படி வேறுவேறு யாதோ விளம்புவாளாகின்றாள். "உருவிலான் செய்யும் பகையினின்று இந்திரனை நீ காத்தல்வேண்டும" என்றும், "தேவர்கள் இக்குக்கடல் கடைந்து வருந்தாவண்ணம் அவர்களை நீ அளிக்கவேண்டும்" என்றும், "பொன்னுலகச் செல்வத்தை நீ எய்தவேண்டும்" என்றும், "இந்திரனை நீ ஏவல் கொள்வாய்" என்றும், "தேவர்களெல்லாம் உன்னைத் தொழும்படிசெய்ய எனக்குக் கட்டளையிடுவாய்" என்றும் பலவாறு பகர்ந்தவைகளின் பொருள்களையெல்லாம் நோக்குங்கால் அந்தத்தில் அவையனைத்தும், "நீ யுன்சுயம்வரமாலையை இந்திரனுக்கே சூட்டுவாய்" என வேண்டுவதாய் முடிகின்றன. இவ்வண்ணம் ஒன்றினை இயம்புவதுபோல் வேறொன்று பயக்கும்படி சொல்வது பிறிதினவிற்சியணியாகும். வடமொழியில் இது பரியாயோக்தாலங்காரம் எனப்படும். இங்கு, "நீ தொழும் அமரர் யாரும் நிற்றொழப் பணித்தி" எனவேண்டுமாற்றால் "நீ இந்திரனை மணந்துகொள்" என்னும பொருளைக் குறிப்பதனிலும் சிறந்த செவ்வி இவ்வணிக்கு நேர்தலரிது.

என்னுளத் தென்று நீங்கா
திருப்பவ னளனே யாகும்
பொன்னகர்க் கிறைவன் தன்பால்
பொருந்துதி யென்னும் தூதுக்
கன்னவ னியையுங் கொல்லோ
வெனமறைந் தயலே நிற்கும்
மன்னவன் மகிழ்ச்சி கூர
மடவா லினிது சொன்னாள். 53.

(உரை.) என்றும் - எப்பொழுதும், என் உள்ளத்து - என்மனதில், நீங்காது இருப்பவன் - நிலைத்து இருப்பவன், நளனேயாகும் - நளசக்ரவர்த்தியே யாவான்; பொன்நகர்க்கு இறைவன்தன்பால் - பொன்னுலகத்திற்கு அரசனான இந்திரனிடத்து, பொருந்துதி - நீ பொருந்துவாய், என்னும் தூதுக்கு - என்று நீ சொல்லும் தூதிற்கு, அன்னவன் - அந்த நளமகாராஜன், இயையும் கொல்லோ - சம்மதிப்பானோ? என-என்று, மறைந்து அயலே நிற்கும் - உருக்கரந்து அயலில் இருக்கும், மன்னவன் - நளன், மகிழ்ச்சி கூர - மிக்க மகிழ்ச்சியடைய, மடவரல் - தமயந்தி, இனிது சொன்னாள் - செவ்வனே பதில் உரைத்தாள்.

விரிவுரை:—கூர என்னும் வினை யெச்சம் இங்கு (நெல்விளைய மழைபெய்தது என்பதுபோல்) காரியப்பொருளில் வந்திருக்கிறது. தமயந்தி சொன்னதைக்கேட்ட நளன் மகிழ்ச்சியடைந்தான். தன்னையே விழைந்திருக்கின்றாள் என்ற உறுதியைக்கேட்டதால் உண்டான மகிழ்ச்சியோடு, அவள் இந்திரனை மணக்க இசையாமையைத் தெரிவித்த சொற்களின் அமைதியினழகும் நளனது மனதைப்பெரிதும் மகிழ்வித்திருக்கும். "இந்திரனே என்னை ஆதரித்து வேண்டுகின்றானென்றால் அடியேன் அவனை யான் மறுக்க வொண்ணுமோ! எனினும் உன் தூதிற்கு இயையவேண்டிய என் மனத்தின்கண் இறையும் விட்டகலாமல் தங்கியிருக்கின்றான் நளன். ஆதலின் அவனது அநுமதியின்றி என்மனம் இந்திரனை மணப்பதற்கு இணங்குவதென்பது இயலாதகாரியம். அந்நளனோ ஒரு போதும் அநுமதிகொடுக்கமாட்டான்.........யான் என் செய்வேன்" என "நளன் இயையமாட்டான்" என்னும் வாசகத்தால் தான் இணங்கவில்லை என்னும் பொருளைக்குறிக்கும் இதுவும் பிறிதினவிற்சியணி யாகும்.

பாசிழைப் பரந்த வல்குற்
பனிமொழிக் குமுதச் செவ்வாய்
மாசறு மதிய மன்ன
வாள் முகத் தணங்கை நோக்கி
யாசையங் கடலு ளாழ்ந்து
கரைபெறு வரச னோக்க
மேசுவ தொன்று மில்லா
முலைவரை யிவர்ந்த வன்றோ. 54.

189122

(உரை.) பாசு இழை - பசும்பொன்னால் ஆன ஆபரணங்கள், பரந்த - தழுவப்பெற்ற, அல்குல் - அல்குலையும், பனிமொழி - குளிர்ச்சிபொருந்திய சொல்லையும், குமுதச் செவ்வாய்-குமுதமலர்போன்ற சிவந்த வாயையும் உடைய, மாசு அறு-குற்றமில்லாத, மதியம் அன்ன - சந்திரன் போன்ற, வாள் முகத்து அணங்கை - ஒளிபொருந்திய முகத்தை உடைய தமயந்தியை, நோக்கி - பார்த்து, (நளன்) ஆசை அம் கடலுள் ஆழ்ந்து - ஆசையாகிய அழகிய கடலில் வீழ்ந்து, கரைபெறு - கரைசேர இயலாத, அரசன் நோக்கம் - நளனுடைய கண்கள், ஏசுவது ஒன்றும் இல்லா - பழிக்கப்படுவதற் கொன்றுமிலாத, முலைவரை - முலைகளாகிய மலையின்மேல், இவர்ந்த - ஏறிக்கொண்டன.

விரிவுரை:—வரும் வழியில் எதிர்ப்பட்ட மாதர்களைக் காண்டலுங்கூடாதென்று கண்முகிழ்த்து வந்த நளன் தான் இந்திரனுக்குத் தூதனேயாய்ப் போந்த முறைமையை உன்னித் தமயந்தியை இதுகாறும் நோக்கி மகிழும் நினைவை யொழித்திருந்தனன். இந்திரன்தூதிக்குத் தமயந்தி உரைத்த எதிர்மாற்றத்தால் அவள் தனக்கே உரியகாதலியாய் நிற்கின்றஉறுதி ஏற்பட்ட பிறகு, அவள் பாதத்தில் செலுத்தியிருந்த தன் பார்வையை நிமிர்க்கலானன். நிமிர்ந்து பார்த்து வருகையில்அவள்முலைகளின் அழகைக்கடந்துஅவன் கண்கள் செல்லாமல் நின்றுவிட்டன. இதனை, ஆசையாகிய கடலில் ஆழ்ந்தவன் முலையாகிய மலையில் ஏறினன் என முரண்பட விளம்புகின்றார் கவி. அல்லது 'முலைவரை,' என்பதற்கு முலையினளவே அவன் கண்கள் ஏறின என்றுங்கொள்ளலாம்.

வடிவமை நூலிற் சொல்லும்
வனப்பெலா மமைத்து வேதன்
கடிமலர்ச் செங்கை வண்ணங்
காட்டிய வுருவு கொல்லோ
வடுகணை வேனி லானின்
னமுதுகோற் றோய்த்துத் தீட்டும்
படிவமோ யுயிரை வாட்டும்
பாவைதன் வடிவந் தானே. 55.

(உரை). உயிரை வாட்டும் - தன் உயிரை வருத்துகின்ற, பாவை தன் வடிவம் தான் - பதுமைபோன்ற தமயந்தியின் உருவம்,

வடிவு அமை நூலில் - இன்னபடி உருவம் அமைய வேண்டுமென்று இலக்கணம் வகுக்கும் சாமுத்ரிகா லக்ஷண நூலில், சொல்லும் - சொல்லலாகும், வனப்பு எலாம் - அழகு எல்லாம், அமைத்து - அமையும்படி, வேதன் - நான்முகன், கடி - வாசனை பொருந்திய, மலர் - தாமரை மலர்போன்ற, செம் கை வண்ணம் - சிவந்தகைகளின் திறமையை, காட்டிய - காட்டிய உருவுகொல்லோ - உருவமோ ?

(அல்லது) அடு - போர்செய்கின்ற, கணை - மலர் அம்புகளையுடைய, வேனிலான் - மன்மதன், இன் - இனிய, அமுதில் - அமிர்தத்தில், கோல் தோய்த்து - எழுதுகோல் தோய்த்து, தீட்டும் - வரைந்துள, படிவமோ - உருவமோ (என்று நளன் மயங்குகின்றான்.)

மடலவிழ் கமலப் புத்தேள்
வடிவினை யமைத்து வெய்ய
தடமுலை யமைப்ப மாதி
னுறுப்பலாற் றரமின் றென்னு
மிடையினுக் கமைத்த கூற்றை
யெடுத்தெடுத் தமைத்த லாலோ
கொடியெனத் தேய்ந்து தேய்ந்து
குறைந்தது மருங்கு லுனே. 56.

(உரை). மடல் அவிழ் - இதழ் விரிந்த, கமலப்புத்தேள் - தாமரையிலிருக்கும் பிரம்மன், வடிவினை அமைத்து - தமயந்தியின் உருவத்தைச் செய்து, (பிறகு) வெய்ய - விருப்பத்தை விளைவிக்கின்ற, தடமுலை - பருத்த தனங்களை, அமைப்ப - அமைப்பதற்கு, மாதின் - தமயந்தியினுடைய, உறுப்பு அல்லால் - உறுப்புகளாகச் சமைந்த பாகங்களை அல்லாமல், தரம் இன்று என்ன - வேறு தகுந்த பொருள் இல்லை என்று தேர்ந்து, இடையினுக்கு - இடுப்பை அமைப்பதற்கு, அமைத்த கூற்றை - உபயோகித்த பொருளின் ஒரு பகுதியை, எடுத்து - சிறிது சிறிதாக இடுப்பினின்று எடுத்து, அமைத்தலாலோ - அம்முலைகளைச் செய்தபடியாலோ, கொடியென - கொடியைப் போல், தேய்ந்து தேய்ந்து - தேய்ந்து தேய்ந்து, மருங்குல் - அவள் இடை, குறைந்தது - குறைந்துபோய் விட்டது.

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[736-வது பக்கத் தொடர்ச்சி]

முதனூற் கதையை யியற்கையி னியக்கினர்.

**ஏ**ண்ணுங்கால் உரைப்பதற் கின்னுமொன் றுளது. பதினன்கு ஆண்டு இராமனைக் கூனி வனம்போக்குவித்தாள் என வான்மீகத்தில் வரையப்பெற்றிருப்பதால் கம்பரும் அவ்வெண்ணிலே கட்டுண்டிருக்கிறார். ஆனால் பதிமூன்று என்னமல் பதினைந்து என்னமல் பதினன்கு என்ற எல்லை கூனியின் வாயில் வந்ததற்கு நிபம் யாதொன்றெம் வடநூன்முனிவர் குறித்திலர். அழகிற் கழகுசெய்யும் ஆற்றலுடைய தமிழ்க் கவிக்கரசு கம்பர் பதினன்கு ஆண்டுகள் என்ற முதனூல் எல்லையிலிருந்து மாறுமலே அவ்வெண் கூனியின்வாயில் இயற்கையாய் வந்ததற்கோர் காரணம் நுண்ணிதின் நுண்ணிய தன் மதியினல் காட்டுகின்றார். மந்தரையின் வஞ்சனைக்கு வயமாய கைகேயி தன் மகன் "புனையும் நீள்முடி பெறும்படி புகலுதி" என்று அவளை வேண்டலும், ஊக்கமுடைய உள்ளத்தவளாகிய அக்கூனி "என்னுரை தலைநிற்பின் உலகம் ஏழும் ஏழும் உன்னெரு மகற்கு ஆக்குவன்" என உறுதி கூறினள். உலகங்கள் பதினன்கு என்னும் எல்லையினுள் அடங்கியவை. ஆதலின் "உலகம் ஏழும் ஏழும்" என்று அவள் இயம்பலாயினள். மற்று, ஏழும் ஏழும் என்னும் தொகை தயங்கிய மனத்தளாய அவள் இராமனைக் காட்டிற்கு எத்தனை ஆண்டு போக்கலாம் என இயம்ப வருமளவில் அவனை "ஏழிரு ப்ருவங்கள் பெயர்ந்து திரிதரச் செய்தி" என அவள் நா எளிதில் இயம்பலாயிற்று. இவ்வண்ணம், முதனூலில் முடிவுபெற்ற ஒரு எண்ணைக் கூனியின் நா நுனியிலிருந்து வந்தாற்போல் கம்பர் இயற்கையாக்கினர். இக்கலைஞர் பெருமானது நுண்ணிதின் ஆழ்ந்து திளைத்தற்குறிய அருமை வாய்ந்த நாடகக் கவித்திறத் துறைகளில் இஃதொன்று. இக்கம்பருக்கே இணையோ வெனும் தகைமைவாய்ந்த ஷேக்ஸ்பியரது அரிய நாடகங்களிலும் இதுவே போன்றவோர் செய்தி இனிது காணலாம். தவணை கடந்த தன்கடனுக்கு ஈடாக அக்கடனளியின் உடலின் ஒரு கூறுவேண்டிய கொடியோன்ஷைலக்என்னும்யூதனின் செய்தியைச் செப்புகின்ற "வெனிஸ் வர்த்தகன்" என்னும் "Merchant of Venice" நாடகம் பெரும்பாலும் எவருக்கும் தெரிந்ததொன்றே. இந்தக்கதை முற்றிலும் ஷேக்ஸ்பியருடைய கற்பனையன்று. அவருக்குமுன் இக்கதையைக் கொண்டுள நூல்கள் சில இருந்திருந்தன. செல்வமும் அழகும் வாய்ந்த போர்ஷியா என்னும் மடந்தையை மணக்க விழைந்த பஸ்ஸானியோ யென்பான் அவள்பால் மணம்வினவச் செல்லற்குப் பணம் இன்மையால் தன் அண்மிய நண்பன் அந்தோனியோவை யடுத்துத் தனக்குப் பொருள்தந் துதவவேண்டினன். அவ்வந்தோனியோ வர்த்தகச்செல்வம் வாய்ந்தவனே ஆனாலும் போதிய பொருள் அதுபொழுது தன் கையில் இல்லாமையால் ஷைலக் என்னும் யூதனிடம் சென்று மூன்று மாதத்



தவணைக்குத் தனக்கு மூவாயிரம் பொன் கடனாகக் கேட்டனன். அன்டோனியோ கிறிஸ்தவன். வட்டித் தொழில் புரியும் யூதஜாதியன் ஷைலக். ஜாதியிற் தாழ்ந்தவன் என்றும் இழிதொழில் புரிபவன் என்றும் இதற்குமுன் பன்முறை ஷைலக்கை அன்டோனியோ பலவாறு இகழ்ந்து நிந்தித்துள்ளான். ஆதலின் அன்டோனியோவின்பால் ஷைலாக்குக்கு ஆறுப் பெரும்பகை நெடிதுகாலமாக யிருந்துவந்தது. ஆயினும் அவ்வஞ்சினம் முடிக்கும் வகைகண்டிலனாய் நெடிதுநாள் புழுங்கிய அவ்யூதனுக்கெதிரே இன்று அவன் கிறிஸ்தவப் பகைஞன் கடன் இரக்க வந்து நிற்றலும், வாய்த்தது தன் வழிப்பகை எனத்துணிந்து "மூன்றுமாத காலத்தில் கடனைக் கொடுக்கவில்லையாயின் உன் உடலின் யான் விழையும் பாகத்தினின்று "ஓர் பவுண்டு" ஊன் யான் எடுத்துக்கொள்ள உடன்படுவாயேல் தருவல்" என இயம்பினன். குறித்த காலத்திற்குள் தன் வர்த்தகக் கலன்களிலிருந்து பெரும் நிதி சுரந்துவிடும் எனும் உறுதியுடைய அந்தோனியோ யாதும் அஞ்சாது தன் நண்பனது குறையைத் தீர்க்கும்பொருட்டு அந்நிபந்தனைக்குடன்பட்டுக் கடனைக் கொண்டான். மாதம் மூன்றுமின; நாவாய்களோ திரும்பவில்லை. யூதனே நிபந்தனைப்படி ஊனையே தன் கடனுக்கு ஈடாக இறுத்திடுவான் தலைநின்றனன். அன்டோனியோவின் நண்பர்கள் கொடுத்தகடன் மூவாயிரம் பொன்னிற்குப் பதிலாக முப்பதினயிரம் தருதற்கிசைந்தாராயினும் பத்திரத்தின்படி ஊனே கொள்வேன் என மற்றையவெல்லாம் அவ்யூதன் மறுத்துவிட, நியாயமன்றத்தில் பஸ்ஸானியோவின் காதலி போர்ஷியா ஆணுடை தரித்துவந்து "யூதா, பத்திரத்தின்படி பெருவாயேல் நீஇவ் அந்தோனியோவின் ஊனைக் கூறிட்டுக் கொள்; அதனைச் சட்டப்படி மறுக்க வல்லவர் இலர். ஆனால் ஒரு பவுன் ஊன் என்றமட்டில் அப்பத்திரத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலின் ஊனினேடு ஒரு துளி உதிரம் சிந்தினலும் உன்னுடைய உடைமைப் பொருள்கள் யாவும் சட்டப்படி பறிமுதலாய்விடும் என்பதை அறிக" என்னலும், இஃது ஏலாது யூதன் தலைமேற் கைவைத்து ஒழியவே அன்டோனியோவின் உயிர் காக்கலாயிற்று. ஷேக்ஸ்பியருக்குமுன் சில நூல்களில் வரையப்பெற்றிருந்த கதை இது. இக்கதையைத் தழுவியே ஷேக்ஸ்பியர் தன் நாடகத்தை யமைத்தார். தவணை தவறினல் அந்தோனியோவின் அங்கத்தையே முறை செயக்கேட்டவிதனை முதனூலிலிருந்து கொண்ட ஷேக்ஸ்பியர் அவ்யூதனுக்குத் தன் பழியைத் தீர்த்துக்கொள்ள இதுவே யேற்ற சமயமாய் அமைந்ததும் அப்பழியைத் தீர்க்கும்வகை இதுவேயாதல் மேண்டுமென அவனுக்குத் தோன்றியதும் இயற்கையாயது எவ்வாறெனச் செவ்விதின் காட்டுகின்றார். அதன் நுட்பத்தை உணர்வதற்கு, பஸ்ஸானியோவும் அன்டோனியோவும் ஷைலக்கை யடுத்துக் கடன்கேட்க ஆரம்பிப்பது முதல் அவன் நிபந்தனைப்படி வாங்க இசைக்கின்றவரை உள்ள பாகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பை இங்குத் தருதல் நலமாம்.

இடம்:—வெனிஸ் நகரம், ஒரு பொதுவிடம்.

[பசானியோவும் ஷைலாக்கும் வருதல்.]

**ஷைலாக்**:—சரி. மூவாயிரம் பொன்னும்.

**பசானியோ**:—ஆம். ஐயா! மூன்றுமாதம் தவணை.

**ஷைலாக்**:—மூன்று மாதமோ? சரி.

**பசானியோ**:—நான் உமக்குச் சொல்லியபடி அந்தோனியோ அதற்குப் பிணையா யிருப்பார்.

**ஷைலாக்**:—அந்தோனியோ பிணையாயிருப்பார், சரி.

**பசானியோ**:—நீர் எனக்கு உதவி செய்யக்கூடுமோ ?
எனக்குச் சந்தோஷம் உண்டாக்குவீரா?
உமது உத்தரம் நான் அறியலாமா?

**ஷைலாக்**:—மூவாயிரம்! பொன்! மூன்றுமாதம்
அந்தோனியோ பிணை!

**பசானியோ**:—அதற்கு உம்முடைய உத்தரம் என்ன?

**ஷைலாக்**:—அந்தோனியோ சரியானவர்.

**பசானியோ**:—அப்படி யல்லரென்று எதாவது
கேள்விப்பட் டிருக்கிறீரோ?

**ஷைலாக்**:—ஆ. இல்லை, இல்லை, இல்லை, இல்லை. அவர் சரியானவரென்று நான் சொன்னதன் கருத்து அவர் பெறுமானவர் என்று நீர் அறிந்து கொள்ளவேணடிய தென்பதே. ஆனாலும் அவருடைய பொருள் வருவாயெல்லாம் சந்தோஷமாக இருக்கின்றன. அவருடைய கப்பல்களில் ஒன்று புறப்பட்டு டிரிப்போலிக்குப் போயிருக்கின்றது. இன்னும் ஒன்று இண்டீசுக்குப் போயிருக்கின்றது. பரிவர்த்தன சாலையில் விசாரித்ததில், மூன்றாவது கப்பல் மெக்சிகோவிலும், நாலாவது கப்பல் இங்கிலாந்திலும், அவருடைய மற்றைப் பொருள்கள் மற்றும் அநேக இடங்களிலும் சிதறுண்டிருக்கின்றனவாகவும் எனக்குத் தெரிகின்றது. ஆனல் கப்பல்கள் பல கைகளாற் செய்யப்பட்டவைகளன்றோ? கப்பற்காரர்கள் மனிதர்களே யல்லரோ? தரையெலிகளும் தண்ணீரெலிகளும் இருக்கின்றன. [அப்படியே] தரைக் கொள்ளைக்காரர்களும் கடற்கொள்ளைக்காரர்களும் இருக்கிறார்கள். சலத்தினலும் காற்றினலும் குன்றுகளினலும் உண்டாகிற கெடுதியு முண்டு. ஆயினும் அவர் பெறுமானவர்தான். மூவாயிரம் பொன், அவரிடத்தில் நான் முறிபெற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கின்றேன்.

**பசானியோ**:—நீர் பெற்றுக்கொள்வதில் சந்தேகமில்லை.

**ஷைலாக்**:—நான் அப்படிச் செய்யக்கூடும் என்பதை உறுதி செய்துகொள்ளவேண்டும். அந்தோனியோவினிடத்தில் நான் பேசலாமா ?

**பசானியோ**:—எங்களுடன் புசிக்க உமக்குப் பிரியமிருந்தால் [புசிக்கச் சந்திக்கும் பொழுது பேசலாம்].

**ஷைலாக்**:—சரிதான். பன்றிக்கறி வாசனை யேற்றுக் கொள்ளவோ? உங்களுடைய நாசரத்துத் தீர்க்கதரிசி ஏவின பிசாசுகளுக்கு இருப்பிடமாகிய பன்றியைப் புசிக்கவோ? உங்களுடன் விற்பேன். உங்களுடன் பேசுவேன். உங்களுடன் நடப்பேன். இன்னும் இப்படிப்பட்டவைகள் எல்லாம் செய்வேன். ஆனல் உங்களோடு கூடப்புசிக்கமாட்டேன். உங்களோடு கூடக் குடிக்கமாட்டேன். உங்களோடு கூடச் சுவாமியை வணங்கமாட்டேன். பரிவர்த்தன சாலையில் என்ன விசேஷம்? இதோ வருகிறவர் யார் ?

[அந்தோனியோ வருதல்.]

**பசானியோ**:—இதோ (வருகிறவர்) அந்தோனியோ.

**ஷைலாக்**:—(ஓர்புறம் ஒதுங்கிக்கொண்டு சொல்லுகிறான்.)
இச்சகத் தண்டற் காரனை யேய்ப்ப
அவனெவ் வாறு தோற்றுகின்றனன். அவன்
கிறிஸ்தவ னுதலால் வெறுத்தே னவனைநான்.
மிகுமட மையினல் வீணிலே காசை
வட்டியி லாமலே வழங்கி வெனிஸில்
எங்கட் கெய்தும் வட்டி யிராசியைத்
தணித்துள னுதலிற் சாலவும் பகைத்தேன்.

அவன் ஒரு முறைவந் தகப்படு வானெனில்
அவன்மாட் டெனக்குள நெடும்பகை யனைத்தும்
தீரத் தெளியத் தீர்த்துக் கொள்வேன்
எந்தூய்க் குலத்தை யிழித்துத் தூற்றி
என்னையு மென்னு ணயவா ணிகத்தையும்
அநீத வட்டி யென்றவ னியம்பிடும்
பாடு பட்டுநான் தேடும் பணத்தையும்
பழித்து வாணிகர் குழுத்தொறும் வாய்ப்பறை
அறைவன் அவனைநான் பொறுத்திடு வேனேல்
எனது குலத்திற் கென்றுஞ் சாபம்
உளதே யாகுக

பசானியோ:—கேட்டிரோ ஷைலாக்.

ஷைலாக்:—இப்பொழு தென்பா லிருக்கும் பொருளெலாம்
எவ்வள வென்றுநா னெண்ணிப் பார்க்கிறேன்
எனக்கு ஞாபக முளவரை யிக்கணம்
மூவா யிரம்பொன் முழுவ தூஉம்
என்வயி னில்லை. ஆயினு மென்சொல்
என்குலச் செல்வத் தியூபலா மீபுரு
வேண்டிய வெறுக்கை கொடுப்பான். பொறும் பொறும்.
திங்க ளெத்தனை செல்லு மென்றனிர்.
(அந்தோனியோவைப் பார்த்து)
கடவுள் துணைசெய, கனமிகு மையா!
இப்போ தியாம் நுவன் றிட்டதும் பெயரே.

அந்தோனியோ:—வட்டிக்குக்கடன் வாங்கலு மீதலும்
இல்லே னாயினு மென்னண் பனுக்கு
விரைவி லவசியம் வேண்டி யிருத்தலால்
வழக்கத்தி னின்றும் வழுவுவல் ஷைலாக்.
யாம்வேண் டுவதெவ் வளவென் றறிவனோ.

ஷைலாக்:—மூவாயிரம் பொன்

அந்தோனியோ:— மும்மதி.

ஷைலாக்:—அயர்ந்தேன். மூன்று மாதமீ ரறைந்தனிர்.
சரிசரி, நும்முறி நிபந்தனை நோக்குவம்.
என்றும்மீர் வட்டிக் கீதலும் வாங்கலும்
இல்லையெனப் புகன்றீ ரெனநா னெண்ணினேன்.

அந்தோனியோ:—அவ்வா றென்றும் யான்செய் திலனால்

ஷைலாக்:—தன்று யிழைத்த தந்திரச் செயலால்
எமது புனித ஆபிரா மினுக்கு
மூன்று ஞாதி யானயாக் கோபு—
ஆம் அவன் மூன்றும் ஞாதியே யாகும்
தனது தந்தைக் கிளவலாம் லபனது
ஆடு மேய்த்திடு மந்நாள தனில்—

அந்தோனியோ:—அவற்கென்? வட்டி வாங்கின னுங்
கொலோ?

ஷைலாக்:—பெற இலை வட்டி. பின்னீ ரியம்பிடும்
வண்ணம்நேர் வட்டி வாங்க விலையவன்.
இயாக்கோப் செய்ததை இயம்புவல் எண்ணுதிர்.
புள்ளியும் வரியும் பொருந்திய மறிகள்
யாக்கோ புக்கு மேய்ப்புக் கூலி
ஆகுக வென்றே யவனும் லபனும்
உடன்பா டுற்றிப் பின்பு சமர்த்தனும்
இடையன் சிற்சில இளவ ளார்களை
உரித்து நாற்ற முடைய இளம்பெண்
ஆடுக ளின்முன் னழுந்த வூன்றினன்.
அம்மறி கருப்ப மடைந்து பின்னர்க்
கருவு யிர்த்திடுங் காலக் குட்டிகள்
பன்னிறத் தனவாய்ப் பலபிறந் தன. அவை
யாக்கோ பினவா யாகி விட்டன.
ஊதியம் பெறற்கிஃ தோர்வழி யாயது,
அவற்குக் கடவு ளருளுமுண் டாயது.
மனிதன் திருட மதியா னாயின்
இலாப மீசன் கடாட்சமே யாகும்.

அந்தோனியோ:—ஐயா! யாக்கோப் இயற்றிய வேலை
மனோரத வர்த்தக மன்றி யவனால்
எய்து வித்தற் கியலா ததுவாய்
நித்த னியம நிர் மாணமா யுளது.
வட்டி வாங்குதல் நலமென வகுப்பான்
இவ்வண மிசைத்தனை போலும் இலையேல்
உன்ற னிடத்துள செம்பொனும் வெண்பொனும்
ஆணுடு பெண்ணு டாமென வறைதியோ

ஷைலாக்:—அஃதுநா னறையேன். ஆயினு மென்றனம்
அவைபோல் விருத்தி யாகிடப் புரிவன். கேளு மையா.

அந்தோனியோ:— கேளும் பசானியோ
பேயுந் தன்பிடி வாத நாட்டச்
சத்திய வேதந் தனையெடுத் துரைக்கும்.
துராத்மா வொருவன் றூய சாட்சியம்
பகர்தல் நகைமுகப் பாதகன் போலவும்
அகத்து ளழுகிப் புறத்தில் அழகுடைப்
பழம்போ லவுமாம் பழுதாம் பொய்க்கும்
அந்தோ வெத்துணை வெளிப்பகட் டம்மா!

ஷைலாக்:—மூவா யிரம் பொன் மும்மதி பெருந்தொகை
யாதலிம் பெறலாம் வட்டியை எண்ணிப் பார்ப்பல்.

அந்தோனியோ:— சரி, ஷைலாக்கே
பணமீந் தெமைக் கடன் பட்டிடச் செய்வையோ?

ஷைலாக்:—அந்தோனியோவே யடிக்கடி பன்முறை
எனது பணமும் வட்டியுஞ் சுட்டி
நாணயச் சாலையி னனியிகழ்ந் துளீர்நீர்
எங்குல விருது பொறையே யாதலின்
எக்கா லமுமதை யென்றோள் விதிர்ப்புடன்
பொறுத்துளேன். என்னை நீர் பொய் மதக்கோள்
உடையாயென்று முயிருண் சுணங்கன்
என்றும் விளித்தே யென்னுடை யூத
மேலா டையின்மேல் மிச்சி லுமிழ்திரால்.
இத்தகைச் செயலெலா மெனதே யான
பணம்யான் வழங்கும் பான்மையி னாயின.
உமக்கிப் போதென் னுதவிவேண்டும் போன்ற.
ஆதலி னெவ்வயி னடைந்தனிர்’ அடைந்து
ஷைலாக்கே நீ தருதி பணம்’’ என
உரையா நின்றனிர், உம்வாய்ப் புனலை
என்றன் முகத்தி லுமிழ்ந்தே யென்னையும்
உந்தம் வாயிலி லுற்றவே திலன்றன்
கள்ள நாயைக் கடையினின் றகற்றி
உதைப்பது போலென்னை உதைத்துளிர் நீரே.
நீர்பணம் வேட்டனீர். உமக்கு நானும்
நவில வேண்டுவ தெவன்? ஞமலிக்கும்
பணமுள தோ? பண மூவாயிரம் பொன்
நாணயங் கள்ளநாய் கடன்றரல் கூடுமோ?
எனநா னியம்பிடி னேற்கா தாகுமோ?
‘‘ஐயா, அடியேன் மீது நீரும்
உமிழ்ந்தீர் புதவாரந்தனி லுமிழ்நீர்,
இன்ன நாளிலே யெனைநீர் உதைத்தீர்,
இன்னு மோர்முறை யெனைநீர் நாயென்
றிகழ்ந்தீ ரித்தகை மரியா தைக்கா
உமக்கித் துணைப்பண முதவு வல்யானி என்’’
றடிபணி வுற்றியா னடிமையிற் றிறலுடன்
அதிவணக் கத்தோ டயலார் கேட்கொணு
வாய்ப்பேச் சுடனே வழங்கிட வேண்டுமோ?

அந்தோனியோ:—நானுனை யின்னு நாயென விளிப்பேன்,
உமிழ்வே னுமிழ்நீ ருதைப்பேன் முன்போல்,
அளித்தற் கியையுறிற் கடன்நின் அன்பர்க்
கீயுமா றென்றனக் கீவதை யொழிதி நீ.
ஈனுந் தகைமை யில்லா வியல்புடை
உலோகந் தனக்கு வட்டியென் குட்டி



தனதுமித் திரன்றன் பாலெக் காலெந்
நேயன் பெற்றுளான்? நீ யெனக்குப் பணம்
தருவையேல் சத்துரு தான்படுங் கடனைக்
குறித்த நாளில் கொடாஅ தொழியிற்
றண்ணளி யின்றித் தண்டனை புரியூஉ
வாங்கு யாபோல் வாங்குதி. இவ்வா
றன்றியீ யற்க.

ஷைலாக்:— ஏஏ பாரு நீர்.
கடுஞ்சினத் தவராய்க் கழறுதன் மதித்தீர்.
உமக்குநான் மித்திர னாகி யுமது
நேசமும் பெற்றுநீ ரெனையுட் படுத்திய
பங்க மறந்து பகரும் பொருளெலாம்
வட்டியே யின்றி வழங்கிட வேட்டேன்.
என்மொழி தன்னை யெள்ளிக் கேளீர்.
இதுநா னியற்ற விழைந்திடும் பட்சம்.

பசானியோ:—அங்ஙன முளதே லதுதயை யாமே.

ஷைலாக்:—இதைநா னியற்றுவல், என்னுட னேகியோர்
சாதன லிகிதன் றன்பாற் சாதனம்
எழுதி யிலச்சினை யிட்டீந் திடுவீர்
நிபந்தனை யின்படி நியமித்த நாளில்
இடத்திற் றொகைதரத் தவறிற் றண்டனை
உம்முடம் பினில்யான் விருப்புறு முறுப்பில்
ஓரிறாத் தல் தசை யறுத்தெடுத் துக்கொள்வ
தெனவிளை யாட்டா யெழுதிநீ ரீகுக.

அந்தோனியோ:—உண்மையிற் றிருத்தியே. உரைத்தவா
றேமுறி
வரைந்து தருவல். வரையிலாக் கருணை
யூதனுக் குளதென வுரைத்திடு வேனியான்.

‘‘நின் தசையையே பணையந் தா’’ வென்று ஷைலக் பணக்கடனுக்குப் பதிலாகக் கிறிஸ்தவன்பால் தன் பகைக் கடனை இறுத்தவாறு இவ்வாறு. ‘‘பன்றியின் இறைச்சியைப் புசிப்பனோ’’ என ஷைலக் தடுத்துரைக்க நேர்ந்ததும், ஆட்டுக் குட்டிகளைப் பற்றிய பேச்சும், ‘‘என்னைச் சத்துருவேயாகக் கொண்டு கடனைக் கொடு’’ என அந்தோனியோவே விளம்பியதும், உரையின்மேல் உரையாய்ச் சம்பாஷணையில் இயற்கையாகத் தொடரலாயிற்று. மாமிசம் என்ற சொல் சற்று முன் பயின்றுளானாதலின், ‘இந்த அந்தோனியோவை எந்த வகையில் வருத்துகின்ற நிபந்தனை கேட்கலாம்’ என்று யோசிக்கப்புகுந்த ஷைலக்கின் நாவானது ‘‘உன் ஊனின் ஒருபகுதி கொள்வேன்’’என விரைந்து இயம்பியதுபோல் ஷேக்ஸ்பியர் அமைத்திருக்கின்றனர். இத்தகையதோர் கொடிய நிபந்தனையை விளம்புதற்குரிய துணிவினை, அந்தோனியோவின் வன்சொற்களே ஷைலக்கிற்குத் தந்தன.

மந்தரை பதினன்காண்டென்றிட்ட எல்லையும் இவ்வண்ணமே அவள் வாயில் இயற்கையாயிற்றென்றுன்னுதல் வேண்டும்.

ஆதலின் யாதுங் கூனியின் சூழ்ச்சியுஞ் சொற்களுமேயன்றிக் கைகேயியின் செயல் இச் செய்திகளிற் சிறிது மில்லாமை புலப்பட்டு நிற்க ஸ்ரீமான் பாரதியார் அனைத்தையுங் கைகேயியின் காரியங்களாய்க் கருதி வாதிக்க நேர்ந்தனர். கற்புக்கடனாற்றும் ஓர் காரிகையாய்க்கம்பர் கைகேயியை அமைத்திருப்பின் அது நலமாயிருக்கும் என ஸ்ரீமான் பாரதியார் தன்னுரையாய்ச் செப்பினாரலர். வான்மீகியுடன் கம்பரது இலக்கும் அதுவே எனச் சாதிக்க நினைக்கின்றனர். கைகேயியின் செயலைக் கம்பர்சிறிதும் பாராட்டநினைத்திலர் என்பதற்குக் கூனியின் சூழ்ச்சிக்கிணங்கித் தன் சூழ்வினையைத் துவக்கத்தலைப்பட்ட, அவள் தன்மையை

நவ்வி வீழ்ந்தென நாடக மயில்துயின் றென்ன
கவ்வை கூர்தரச் சனகியாங் கடிகமழ் கமலத்
தவ்வை நீங்குமென் றயோத்திவந் தடைந்தவம் மடந்
தவ்வை யாமெனக் கிடந்தனள் கைகயன் றனையை[தை

[மான் விழுந்தாற் போலவும் நடிக்கின்ற மயில்துயில்வது போலவும்—வருத்தம் மிக,சீதையாம் வாசனைவீசும் தாமரையிலிருக்கும் இலக்குமி நகரை விட்டு நீங்குவாள் என்றுணர்ந்து அயோத்தி வந்தடைந்த அவள் தமக்கை மூதேவியைப் போல் கைகேயி கிடந்தாள்.]

என்று முடியும் இப்படலத்தின் இறுதிப் பாசுரமே ஏற்ற சான்றாகும். கணவனது வாய்மையைக் காக்கும் பொருட்டுத் தன் கற்புக்கடனாற்றுஞ் சிந்தனைக்குத் தன்னையேபலிநல்கிய உத்தமிஇக்கைகேயிஎன்றவெண்ணம் எள்ளளவேனும் உடையவராயின் கம்பரவளை ‘மூதேவி’ என்று ஒருபோதும் உரைத்திருக்கமாட்டார். தன் கருத்தின் திறவுகோலைக் கடைசிச் செய்யுளில் வைத்தார்கவி.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
சோல் ஏஜன்டுகள்:-யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்
குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
‘‘பால சுதா’’ (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்
SADVAIDYASALA NANJANGUD
SOLE AGENTS THE UNITED CONCERN, MADRAS
டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (1-8-0) பிரான்சு:
டிப்போ, பம்பாய் கல்கத்தா
NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA, NANJANGUD
மதுரை
காஞ்சீபுரம்.

# தனிப்பாடல்கள்.

## மழை

யாழ்ப்பாணம்—நவாலி - க. சோமசுந்தரம் பிள்ளை

அருங்கணி நூறுவ லாறைந் திரட்டி
வருங்கடை யாண்டு மதிதுதி யாரல்
ஐந்தா மல்க லடைசனி நாளி
லுச்சியம் போழ்தி லொளிசிறிது காட்டிப்
பச்சிமம் படர்ந்து பரவை வாயொளித்த
செங்கதிர்க் கடவுள் கங்குல்போய்க் கழிந்த
வழிநா ளிருநா ளொளிகொடான் மறையக்,
கடல்சூ ழிலங்கைக் கடுகணை வெற்பிற்
தொடுகுகை யிருள்போல் நெடுவிசும் பிருள,
வடந்தைத் தண்வளி நடுங்குகுளிர் நலிதலிற்
சிம்புளிப் போர்வையர் கம்பளச் சட்டையர்
சூழியர் புகையடைச் சுருள்புகை வாயினர்
பரியகத் திருப்பினர் பற்பறை கொட்ட
நரைமயிர்ச் சென்னித் திரைமலி யாக்கைப்
பற்பறி பகுவாய்ச் சொற்றளர் கிழவிகள்
அகல்வாய்க் குண்டக் குழிசியி னுமிதிணித்
தாரழல் மூட்டி யகலா ரணுகார்
சேருபு விருந்து தீக்காய்ந்து நொடிசொலச்,
சொல்வழி நில்லா மெல்லியற் சிறாஅர்
புடைபெயர்த் தோடி நடையிழுக் குற்று
மண்புரள் மேனியர் கண்பிசைந் தழுநரை
யன்புடைத் தாய ராற்றின ரேந்தி
யின்புட னீர்துடைத் தும்பரி னிருத்தக்,
கொம்மை வெம்முலைக் கொடியிடை மடவார்
இம்மெனுஞ் சும்மையோ டிருந்து மெழுந்தும்
காந்தன் மென்விரல் கடுப்ப வேந்திய
பூணுடைக் கருந்தடி யோச்சி மாணுரற்
காயாப் புழுங்க லோயா தவைத்துக்
கைசலித் தரிசி மெய்வியர்ப் படைவோர்
தட்டினிற் கொழித்து வட்டி னளப்புழிக்
கவைமரச் சேக்கையி னிரவெலா நனைந்து
காய்பசி கடுக மேவிய கொடிப்புள்
அற்றம் நோக்கி யலகுகுத் தெடுத்துச்
சுற்றந் தொடர முற்றில்புக் குண்ணக்
கூரைநின் றொழுகுந் தாரைநன் னீரில்
விசளையுங் குழிசியு மடுகலங் கழுவுநர்
முற்றத் தூற்றப் பற்றெடுத் துண்குபு
ஆடித் திங்கட் கூடுவா நாளிற்
கீரி மாமலை வாரிதி நறுநீர்
உடையொடு குடைந்து புடைபெயர் மாந்தரின்
முழுதுடல் நனைந்து சிறைதுளி தூவத்
தீநா வன்ன செஞ்சுட்டு முட்டாட்
பெடையொடு புகுந்த வாரணச் சேவல்
படுபிணி யாளர் துடியென நடைகொண்
டாங்கவை கரும்புட் கவர்ந்திட வெட்கி
நாங்கூழ் கவ்வி யுதறிவாய் மடுப்பத்,
தினைக்குரற் கதிர்வாற் கொடுவரிச் சிறுபுற
மனைப் பனைப்பள்ளி மணிப்பிளை குப்புற்
றுடைத்துக் களித்துப் புழித்துளிச் சிறுவர்
புடைப்பட வீசிய விளங்கனி யுடையல்
வாயினிற் கவ்வி மனைப்புறம் புகுந்து
தூய வுள்ளீடு கோதி வயிறுர,
மேவிய புற்றிடம் வெள்ளங் கொள்ளலின்
வாலிய முட்டை காஅய வாயின
சிற்றெறும் பேறி மற்றிடங் கொள்ள,
முற்றில் கவிழ்த்த தலையினள் ஒற்றைக்
கையினி லொதுக்கிய துகிலின ளொருகை
குடங்க ரேந்திய நுடங்கிடை நல்லாள்
கூவனீ ரொண்டு சேவடி வழுக்கி
நெடுநில வரைப்பிற் றுடுமென வீழாக்
குடத்தொடு நறுநீர் கொடுத்தன ளலமற,
அட்டில் வினைபுரி யருமனைக் கிழத்தி
இட்ட சுல்லியி னீரவிற கடுக்கிக்
கருங்குழல் துகிலொடு சோர மருங்குசாய்ந்
தூத வூத வெரியாது புகைத்தலின்
போதுறழ் கரத்தாற் கண்மலர் பிசையா
மூக்குநீர் சிந்திக் காக்கையி னோக்க
ஈயுண விறுத்த விருகட் கொருமணி
வாய சங்குத்த வாலினிற் றூரத்திச்
சூகிப் புழைக்கை மூசி கொசுக்கடித்த
வாய்தொறும் வடிந்த குருதிக் கறைக்கால்
நிமிர்மயி ராக்கை யானுமா னேறும்
வையுணா வின்றி மெய்நடு நடுங்கி
மேலை யிறப்பி னோலை கடித்துண்ணத்,
தோயா தெழுதும் மைமெய் வரைகோல்
உயிர்பெற் றன்ன வயாவி லெழில்நடைக்
கடம்பித ழாயிரக் காலி கடிந்துமிக்
கடைமுன் னுயிர்போ லுடல்வளை இக்கிடக்கப்,
பகலவன் மறைவு தகரையி னுணர்ந்து
நிகர்மலர் நெல்லொடு தூஉ யகல்விளக்
காயிழை மகளிர் மனைதொறு மேற்ற
வகிற்கூட்டு நறும்புகை யன்றியு நகர்தொறும்
அரவாய்க் கடிப்பகை அருவிரை மீந்தோல்
பருஉவாய்க் குழிசி யெரியிடைப் புகைப்ப
வெண்முகப் பருந்துங் கருநிழக் காக்கையும்
அஞ்சிறைப் பறைவையுந் தஞ்சிறை யொதுங்கக்
கஞ்சி யுண்டுங் களியூண் மிசைந்தும்
எஞ்சிய பகலுணா வின்புட னருந்தியும்
வயிறு நிரப்பிப் புயல் வருமோவென்
றையுறு மனத்தினர் மைவிழி கூப்பி
ஏறிய சேக்கையி னிருந்து தலையசைக்க
முழவு தக்கை யிடக்கை யுடுக்கை
திமிலை திண்டிமம் கடிகை துடிகை
சகடை யூமை கடுவை கண்டிகைமுதற்
றாரியம் வல்லவ ரோர்வயிற் குழீஇ
வினைத்திறங் காட்டுபு துவைத்தெனப் பள்ள
வெள்ளத் துள்ள வரிக்குலங் குழுமிக்
கொள்ளைப் பேரொலிக் குமிலங் கொள்ள
வைந்நுதிப் புழைக்கை ஞொள்ள லீண்டிக்
கொட்டிய கடுப்பும் கொல்லுபு கையாற்
றட்டிய நோவும் தத்தமக் காக்கி
உடல்சரித் தோடி மிடற்றெழு சங்கொலி
காதிடை யூதி மாதுயர் செய்ய
இன்னுழை கள்வரி னுண்ணுழைந் தொழுகும்
சிறுதுளி சில்லென் றுறுதுயில் கெடுக்க
விதிவழி நிலாது தம்மதி வழிச்சேறும்
அறிவிலர் போல வுழவினர் செறித்த
வடல்வரம் பிகந்த மிடல்கெழு நீத்தம்
கடல்புகப் பற்பல கால்கொண் டோடக்
கடைமுறை கூவிய செஞ்சூட்டு வாரணச்
சிறுகுரல் கேட்டுப் பொழுதுல குணரக்
கட்டின ருவப்பப் பிரிந்தோருள நையத்
தொய்வு நோயா ளரும் வருந்தப்
பெய்தன் றலப்பில் பெருமழைக் குலமே.




# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமோம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50.
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

**மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.**

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

## :: அருந்தமிழ் நூல்கள் ::

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| மூவர் தேவாரம் அடங்கன்முறை | ... | 7 | 0 |
| நாலாயிர திவ்ய பிரபந்தம் ... | ... | 4 | 0 |
| இராமலிங்கசுவாமி திருவருட்பா திருமுறை | | 7 | 0 |
| நைடதம் மூலமும் உரையும் ... | ... | 4 | 0 |
| பட்டினத்தார் பாடல் உரை ... | ... | 2 | 0 |
| அருணாசல புராணம் „ ... | ... | 2 | 0 |
| தாயுமானவர் பாடல் உரை ... | ... | 4 | 0 |
| „ மூலம் மட்டும் | ... | 1 | 8 |
| திருப்புகழ் மெய்ஞ்ஞான விருத்தியுரை | ... | 2 | 0 |
| பாராயணத் திருப்புகழ் ... | ... | 2 | 0 |
| விநோதரசமஞ்சரி ... | ... | 2 | 8 |
| ஸ்ரீபகவத்கீதை (திராவிட மகா வியாக்யானம் | | 3 | 8 |
| „ வசனம் ... | ... | 2 | 0 |
| „ (பாகெட் சைஸ்) | ... | 1 | 0 |
| நாகம கூளப்ப நாயகன் விறலி விடுதூது | | 0 | 12 |
| ஔவை அருந்தமிழ் ... | ... | 0. | 12 |

மற்ற எல்லாத் தமிழ்நூல்களும், தேசீய நூல்களும், நாவல்களும், புராணங்களும் எங்களிடம் எப்பொழுதும் கிடைக்கும்.

**கே. எஸ். மணியம் அண்டு கம்பெனி,**
புஸ்தக வியாபாரிகள்,
இராயப்பேட்டை, சென்னை.



## :: திருக்குறள் ::

மூலமும், சொற்குறிப்பு அகராதியும், விஷய ஒப்புக் குறளும்; வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு.

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300-பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப்படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதன் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

வி. பி. செலவு வேறு. விலை அணா 12.

கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசை, சென்னை.



Estd. **NATIONAL** 1906
**INSURANCE COMPANY LIMITED.**
*Head Office:*-**9, Old Court House St., Calcutta.**

INDIA'S PROBLEMS CAN ONLY BE SOLVED BY INDIANS

INSURE IN AN INDIAN COMPANY MANAGED BY INDIANS, FOR INDIANS

"NATIONAL" IS THE STRONGEST COMPANY MANAGED PURELY BY INDIANS

"NATIONAL" STANDS FOR INDIAN LIFE ASSURANCE

Low rates of premia. Invested Funds over **Rs. 1,47,000,00**

Prompt settlement of Claims. Claims paid exceed **Rs. 67,000,00**

*IT WILL PAY YOU TO ENQUIRE ABOUT AGENCY TERMS Please apply tothe Company to-day.*

**R. G. Das & Co,** OR **Mr. T. A. Anantachari** B.A.
*Managers.* *Branch Secretary,*
*Loane Square, Broadway,*
*Madras.*



# கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி

## பிரசுரங்கள்.

### சங்க நூல்

*சென்னைப்பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்*
திருவாளர் - கா. ரா. கோவிந்தராஜ முதலியார்
*எழுதியது.*

தமிழின் அரும்பெரும் செல்வமாய் வாய்த்திருக்கும் சங்ககால இலக்கியங்களைக் கற்பவர்க்கு இணையிலாப் பேருதவி யளிக்கவல்ல இந்நூல் எவ்வெவர் மாட்டும் இருக்கவேண்டியது இன்றியமையாதது. மூச் சங்கங்களின் வரலாறும், அவ்வச் சங்கங்களில் பாடப்பெற்ற நூல்களின் தன்மையும், இவையனைய பிறவும் இந்நூலின்கண் விளக்கிஇருக்கக் காணலாம். இத்தகைய அறிவினை யளிப்பதுடன் ஓதுதற்கும் இனி இனிது இந்நூல். தமிழ்ப்பற்றுடையவ ரனைவர் கையிலும் இந்நூலொன்று இல்லாமல் தீராது. சங்க நூல்களைப் படிக்க ஆரம்பிப்பதற்குமுன், இந்நூலைக் கற்றிருப்பாராயின், அச் சங்கநூல்களின் உண்மைப் பொருளையும், அழகையும், பயனையும் உணர்வது எளியதாகும். விலை ரூபா 1—4—0.

### கந்தபுராண வசனம்

*வித்வான்*
என். வி. முத்துகிருஷ்ண ரெட்டியாரவர்கள்
*எழுதியது.*

முருகப் பெருமானது திருவவதாரச் சிறப்பினையுரைக்கும் கச்சியப்பசிவாசாரியார்தம் பெருங்காப்பியமாகிய கந்தபுராணச் செய்யுள்களைத் தழுவித் தெளிவும் இனிமையும் வாய்ந்த செந்தமிழ் வசனநடையில் எழுதப்பெற்றுள இந்நூல், முதனூலின் பெருமையிற் சிறிதுங் குறையாமல், தமிழழகு பூத்துச் சைவசித்தாந்த நறுமணம் வீசிப் பத்தித்தேன் சொட்டி ஞானங் கனிந்த வொரு கற்பகத் தருவிற்கு நிகராகு மென்பதிலையமில்லை. ஆறுமுகமுடைய அருட்பெறும் குமரவேளின் திப்பிய சரித்திரத்தைச் செய்யுள்வாயிலாக ஓதியுணர்ந்து அவர் கருணைக்கு ஆளாகவல்லார் சிலரேயாக, எத்தகையினோரும் எளிதில் படித்துத் தெரிந்து கொள்ளுமாறு வசனநடையில் வரைந்துள இந்நூல் தமிழரனைவர்க்கும் அருமருந்துபோல் அமைந்திருக்கின்றது. (கிளேஸ் பேபர்) விலை ரூபா 2—8—0.

**கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி**
**திருவல்லிக்கேணி, :: :: சென்னை.**




## வர்த்தமானம்.

சட்ட விரோதமாய் உப்புக்காய்ச்சத் தூண்டியதாகத் தண்டிக்கப் பெற்ற ஸ்ரீமான்களான ஸ்ரீ நாகேஸ்வரராவ் பந்தலு, பாஷ்பம் செட்டி, ரங்கைய நாய்டு ஆகிய இவர்கள் செம்டம்பர்மாதம் 20ந் தேதி அன்று விடுதலை செய்யப்பட்டனர்.

***

வட்ட மேஜை மஹாநாடு:—லண்டனில் கூடவிருக்கும் வட்டமேஜை மஹாநாட்டிற்கு மொத்தம் 50பிரதிநிதிகளில் சுதேச சமஸ்தானத்திற்காக 16பேர் நியமிக்கப் பெற்றிருக்கின்றனர். சென்னை மாகாணப் பிரதிநிதிகளாக, கனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார், ஸர். பி. சிவஸ்வாமி ஐயர், திவான்பகதூர் ஏ. ராமசாமி முதலியார், திவான்பகதூர் M. ராமச்சந்திரராவ், ஸர். ஏ. பி. பாத்ரோ, பர்லாகிமிடிராஜா, ராவ்பகதூர் பன்னீர்ச் செல்வம், ஸி. இ. வுட், முதலியவர்களும், ஆதித்திராவிடர் பிரதிநிதியாக R ஸ்ரீனுவாஸன் என்பவரும், சென்னை ஸ்திரீகளின் பிரதிநிதியாக டாக்டர் சுப்பிராயன் மனைவியும் நியமிக்கப்பெற்றிருக்கின்றனர் என்று தெரிகின்றது.

***

உலகத்தில் இப்பொழுது $3\frac{1}{2}$கோடி மோட்டார் வண்டிகள் உபயோகத்தி லிருந்துவருகின்றனவாம். அதாவது உலக ஜனத்தொகையில் 55 பேருக்கு ஒரு மோட்டார் வீதம் ஆகின்றதெனக் கணக்கெடுக்கப் பட்டிருக்கின்றது. 1930ம்வருஷம் எடுத்த கணக்குப்படி உலக ஜனத்தொகை 195, 90, 00, 000. 55பேர்களுக்கு ஒரு மோட்டார்வண்டி இருக்கின்றது. 1929 வருஷம் 61பேருக்கு ஒரு மோட்டார் இருந்தது. கனடா, நியுஸிலாந்தில் 8பேருக்கு ஒரு மோட்டார் இருக்கின்றது. ஆஸ்திரேலியாவில் 10பேருக்கு ஒரு மோட்டார் இருக்கின்றது. ஆனால் கனடாவைக் காட்டிலும் அமெரிக்கா, இங்கிலாந்து பிரான்ஸில் அதிக வண்டிகள் இருக்கின்றனவாம். மோட்டார் பெருக்கத்தில் கனடா 4-வது இடத்தையே பெருகிறது.

***

பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கம்:—இச்சங்கத்தின் ஏழாம் ஆண்டு அறிக்கைப் பத்திரமொன்று வரப்பெற்றோம். பர்மாவில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களால் 47 கோடி ரூபாய் வரை தொழில் செய்யப்படுவதாக வருமானவரி இலாக்காதார் கணக்கெடுத்திருக்கின்றனர். பர்மாவில் விவசாயப் பெருக்கிற்குச் செட்டிமார் முதல்தனமே முக்கிய காரணம் என்பதை எல்லோரும், பர்மா கவர்ன்மெண்டாரும் ஒப்புக்கொள்கின்றனர். நாட்டுக்கோட்டைச் செட்டியார் நிறுவியுள்ள இச்சங்கம் அதிகச் செல்வாக்குப் பெற்றிருக்கின்றது. இச்சங்கத்தின் அபிப்பிராயத்திற்கு அரசாங்க மசோதாக்கள் அனுப்பப் படுகின்றன. சங்கத்தில் நல்ல வாசக சாலையும் இருக்கின்றது. 40 பத்திரிகைகள் வருகின்றன. செட்டியார்களுக்கும் இச்சங்கத்தால் நன்மை உண்டு. சென்ற ஆடிமாதத்துடன் முடிவான ஒரு வருட வரவு செலவுக்கணக்கும் இந்த வறிக்கைப்பத்திரத்தில் சேர்க்கப் பட்டுள்ளது.

## மதிப்புரை.

### இராமாம்ருதம் எம். ஏ.

லக்ஷ்மி, வியாபாரம், முதலியவற்றின் ஆசிரியரான K S. சுந்தரம் அவர்களால் இயற்றப்பெற்று, சென்னை அமிர்தம் கம்பெனியாரால் பிரசுரிக்கலாயது.

விலை அணா 4.

அனேக வாண்டுகளாக வர்தகத் துறையின் முன்னணியில் பயின்றுவரும், ஸ்ரீமான் K. S. சுந்தரம் அவர்கள் இயற்றிய இச்சிறு நாடகம் அதன் முன்னுரையில் குறித்தபடி, செலவு மிகச் செய்து பி. ஏ. முதலிய பட்டங்களைப் பெற்றும் வயிற்றிற்கு வழியின்றி அல்லல்படுவதிலும், வெற்றிலை பாக்குக்கடை வைத்தேனும் வட்டிக்குப் பணம் கொடுக்கும் வியாபாரம் செய்தேனும் வாழ்நாளை நடத்துவதே மேல் என்னும் நோக்க முடையோர் கொள்கைக்கு இணங்கியதோர் இலக்கியமாய் அமைந்திருக்கின்றது.

"நமது நாட்டின் பரிதாபகரமான நிலைமையை நோக்கும்போது, நமக்கு ஸஞ்சீவி தொழில் - தொழில் தான்" என்ற இவ்வாசிரியரின் உறுதியின்படி "அயல் நாடு சென்ருவது, ஐரோப்பியர்களைப்போல் ஏழு கடல் தாண்டியாவது தொழில் செய்து தமிழ் நாட்டைக் குபேரநாடாக்க வேண்டுமென்று" ஜனங்களை ஊக்கும்பொருட்டு இயற்றப்பெற்ற இந்நாடகம், ஆங்கிலம் பாதியும் தமிழ் பாதியுமாகப் பேசிப் பேசி வேலையில்லாத் திண்டாட்டத்தில் உத்தியோக வாயில்தோறும் முட்டுண்டு திரிகின்ற அதனுள் வரும் இராமாம்ருதத்தின் கதியாலும்; பன்னிரண்டு தம்படி முதலோடு பட்டினம் வந்து பணக்காரனுன மார்வாரி ஒருவனும், காப்பி ஓட்டலில் தட்டுக் கழுவுகிறவனுய் வந்து பின் வெற்றிலைபாக்குக் கடைவைத்துப் பின் தன் ஊரில் நிலங்களும் வாங்கி விட்ட மலையாளி ஒருவனும் தங்கள் தங்கள் பாஷையோடு தமிழையும் கலந்து பேசுகின்ற 'கொச்சைப்'பேச்சுக்களாலும் அண்டைவீட்டுக் குட்டிக்கு அவள் அகமுடையான் கிட்டு நெல்லு வியாபார லாபத்தைக்கொண்டு செய்து போட்டிருக்கும் நகையைக் காட்டிக் காட்டித் தன் புருஷனை இடித்துப் பேசும் இராமாம்ருதம் மனைவியின் வன்சொற்களாலும்; தம்முன் நிகழ்கின்றவற்றைப் புகைப்படம் பிடித்தாற்போல் அச்சிலே கண்டக்கால் மகிழ்கின்றவர்களையெல்லாம் பெரிதும் மகிழ்விக்கும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.


ஒட்டக்கூத்தர் பாடிய
# தக்கயாகப் பரணி
(உரையுடன்)

மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

இதுவரையில் அச்சேருத இவ்வரியநூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.

விலாசம்:—கலாநிலயம்: 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

KALANILAYAM.
REG. NO. M. 2324.


## பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமுக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கப்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாடு சந்தா | ரூபா | | 2 0 0 |
| வெளிநாடு | ,, | ,, | 2 8 0 |
| தனிப்பிரதி விலை | அணு | | 0 4 0 |

விலாசம் :—'பாரதி' கார்யாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

## தேவதாசிகள்

அமெரிக்க மாது மிஸ் மேயோவால் எழுதப்பட்டது. இந்தியர் பழக்க வழக்கங்களைப்பற்றி எழுதியுள்ளார். படிக்க வேடிக்கை. விலை ரூ. **1-0-0.**

**முத்தையா புக் டிப்போ,**
தபால் பெட்டி 99, சென்னை.

## அமிர்த குண போதினி



5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ. 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனும்.

## ஆங்கில ஆசான்



10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவா யிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

**தி. இராஜகோபால் முதலியார்,**
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

## கம்ப ராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

| | | | |
|---|---|---|---|
| பால காண்டம் | ... | ரூ. | 5. |
| அயோத்தியா காண்டம் | | ரூ. | 5. |
| ஆரண்ய காண்டம் | ... | ரூ. | 4. |
| கிஷ்கிந்தா காண்டம் | ... | ரூ. | 4-8. |
| சுந்தர காண்டம் | ... | ரூ. | 5. |

(வி.பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை

## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. **1-0-0.** (வி. பி செலவு வேறு).

மானேஜர் :—" கலா நிலயம் ",
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)